இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

தின பூமி
thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com





## சர்வதேச நீதிமன்றம் உத்தரவு எதிரொலி: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு வந்தால் கைது செய்வோம்: இங்கிலாந்து அறிவிப்பு

...2-ம் பக்கம்

## மகாராஷ்டிராவின் அடுத்த முதல்வர்? ஏக்நாத் ஷிண்டே பதில்

...3-ம் பக்கம்

## பெர்த் முதல் டெஸ்ட் போட்டி: ஜெய்ஸ்வால், ராகுல் அபாரம்; வலுவான நிலையில் இந்தியா

...7-ம் பக்கம்



### பார்லி. கூட்டத்தொடர் நாளை துவக்கம்:

# டெல்லியில் இன்று அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு

புது டெல்லி, நவ. 24-

**பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நாளை தொடங்கவுள்ள நிலையில் இன்று டெல்லியில் அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.**

பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நாளை தொடங்கி டிசம்பர் 20-ம் தேதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரை முன்னிட்டு, இன்று அனைத்து கட்சி கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதன்படி இன்று காலை 11 மணிக்கு அனைத்து கட்சி கூட்டம் நடைபெற உள்ளது. இதில் பாராளுமன்ற கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது குறித்து மத்திய அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட உள்ளது. வக்பு சட்ட திருத்தம் உள்ளிட்ட முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு முனைப்பு காட்டி வரும் நிலையில், பல்வேறு முக்கிய பிரச்சனைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் வரும் 26-ம் தேதி பாராளுமன்ற மையம் மண்டபத்தில் அரசியல் சாசனத்தின் 75-ம் ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்படும் என மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ தெரிவித்துள்ளார்.




தி.மு.க. மகளிரணி சார்பில் நடைபெற்ற ‘கலைஞர் 100 - வினாடி-வினா’ போட்டியில் முதல் பரிசை வென்ற வெற்றியாளர்களுக்கு சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசு வழங்கி பாராராட்டினார். அருகில் கனிமொழி எம்.பி. உள்ளிட்டோர் உள்ளனர்.

### சவரனுக்கு ரூ.600 உயர்வு:

# தங்கம் விலை தொடர்ந்து 6-வது நாளாக அதிகரிப்பு

சென்னை, நவ. 24-

**சென்னையில் தங்கம் விலை நேற்று (நவ. 23) சவரனுக்கு ரூ.600 உயர்ந்து ரூ.58,400-க்கு விற்பனையான நிலையில் தொடர்ந்து 6-வது நாளாக விலை உயர்வு தொடர்கிறது. கடந்த 6 நாள்களில் மட்டும் தங்கம் விலை சவரனுக்கு ரூ.2,920 உயர்ந்துள்ளது.**

சென்னையில் கடந்த அக்.31-ஆம் தேதி தங்கம் விலை சவரன் ரூ.59,640 வரை உயர்ந்து விற்பனையானது. தொடர்ந்து, அமெரிக்க அதிபர் தேர்தல் எதிரொலியாக தங்கம் விலை தொடர்ந்து குறைந்த வண்ணம் இருந்தது. இதன்படி, நவ.1 முதல் நவ.16 வரை தங்கம் சவரனுக்கு ரூ.4,160 குறைந்து, சவரன் ரூ.55,480-க்கு விற்பனையானது.

இந்த நிலையில், நேற்று (நவ. 23) சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ. 75 உயர்ந்து 7,300-க்கும், சவரனுக்கு ரூ. 600 உயர்ந்து ரூ. 58,400-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலை தொடர்ந்து 4-வது நாளாக எந்தவித மாற்றமுமின்றி கிராம் ரூ.101-க்கும், கிலோ ரூ.1,01,000-க்கும் விற்பனையானது. கடந்த 6 நாள்களில் மட்டும் தங்கம் விலை சவரனுக்கு ரூ.2,920 உயர்ந்துள்ளது.

### கோவில் யானை தாக்கி உயிரிழந்த பாகன் உள்ளிட்ட

# 2 பேரின் குடும்பத்தினருக்கு முதல்வர் ஸ்டாலின் நிதியுதவி

## தலா 2 லட்சம் ரூபாய் வழங்க உத்தரவு

சென்னை, நவ. 24-

**திருச்செந்தூர் கோவில் யானை தாக்கி உயிரிழந்த பாகன் உள்ளிட்ட 2 பேரின் குடும்பத்தினருக்கு முதல்வர் ஸ்டாலின் நிதியுதவி அறிவித்துள்ளார். தலா ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்க அவர் உத்தரவிட்டுள்ளார்.**

**பக்தர்கள் எண்ணிக்கை**

அமைச்சர் சேகர்பாபு நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது தெரிவிக்கையில்., சபரிமலை அருள்மிகு அய்யப்பன் திருக்கோவிலில் ஆண்டுதோறும் மண்டல பூஜை 41 நாட்களும், மகர விளக்கு பூஜை 21 நாட்களும் நடைபெறுகின்றது. சுவாமி அய்யப்பனை தரிசனம் செய்வதற்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருகிறது.

குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்து அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் செல்வதை அனைவரும் அறிவீர்கள். சபரிமலைக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் கேரள அரசும், திருவிதாங்கூர் தேவஸ்தானம் போர்டும் செய்து வருகின்றன.

**தகவல் மையம்...**

தமிழ்நாட்டிலிருந்து சபரிமலைக்கு செல்லும் பக்தர்களின் நலன் கருதி, இந்து சமய அறநிலையத்துறை, அய்யப்ப சுவாமி பக்தர்களுக்கு உதவிடும் வகையில் தலைமையிடத்தில் 24 மணி நேரமும் செயல்படுகின்ற தகவல் மையத்தை அமைத்துள்ளது.

மேலும் துறையின் சார்பில் சபரிமலையில் பக்தர்களுக்கு வழிகாட்டுகின்ற விதமாக கண்காணிப்பாளர் நிலையிலான அலுவலர்கள் இருவரை பணியமர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மலர் வழிபாடு...**

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளாக கார்த்திகை மாதத்தில் அய்யப்பன் மலர் வழிபாடு நடத்தப்பட்டு, 40 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து சென்று வந்த குருசாமிகளை கவுரவிக்கின்ற வகையில் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, அய்யப்பன் உருவம் பொறித்த வெள்ளி டாலருடன் கூடிய துளசி மாலை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டிற்கான அய்யப்பன் மலர் வழிபாடு வருகின்ற 25ஆம் தேதி மயிலாப்பூரில் நடைபெற இருக்கிறது.

பாதுகாப்பு நடவடிக்கை...

திருச்செந்தூர் திருக்கோவிலில் அன்றைய தினம் யானையோடு செல்பி எடுக்க முயன்றபோது அந்த யானை அதற்கு அனுமதிக்கவில்லை. தொடர்ந்து அவர் முயற்சி செய்தபோது இந்த விரும்பத்தகாத சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்த சம்பவம் நடந்த பத்து நிமிடங்களுக்குள்ளாகவே அந்த யானை மீண்டும் பாகன் மீது வைத்திருந்த பாசத்திற்காக அவரை தட்டி தட்டி எழுப்புகின்றது.

எதிர்பாராதவிதமாக, கோபத்தால் ஏற்பட்ட விளைவாகதான் இதை பார்க்கின்றோம். அதன் பிறகு மீண்டும் குளியலுக்கு கொண்டு சென்றபோது அந்த யானை மீண்டும் ஆனந்தமாக குளிக்கின்றது. ஆகவே வருங்காலங்களில் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நடைபெறாமல் இருக்க அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நிச்சயமாக எடுப்போம்.

**முதல்வர் உத்தரவு...**

இப்படிப்பட்ட ஒரு துயரமான சம்பவம் நடந்திருக்கக் கூடாது. இந்நிகழ்விற்கு தமிழ்நாடு அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் ஆழ்ந்த இரங்கலை வருத்தத்தை பதிவு செய்கிறது.

அந்த நிகழ்வில் உயிரிழந்த பாகனின் குடும்பத்திற்கும் ரூபாய் 5 லட்சமும், மற்றொரு நபரின் குடும்பத்திற்கு ரூபாய் இரண்டரை லட்சமும் நிதி உதவியாக திருக்கோவில் சார்பில் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

**மிகுந்த வேதனை...**

இதற்கிடையே முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் உள்ள யானை பாகன் உதயகுமார் மற்றும் அவரது

(கடைசி பக்கம் பார்க்க)

### ஜார்கண்ட்டில் சட்டசபை தேர்தலில்

# இண்டியா கூட்டணி வெற்றி: முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, நவ. 24-

**ஜார்கண்ட்டில் இன்டியா கூட்டணி வெற்றி பெற்றுள்ள நிலையில், ஹேமந்த் சோரனுக்கு முதல்வர் மு.க ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் இன்டியா கூட்டணி வெற்றி பெற்றதற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஜார்கண்ட் வெற்றி மக்களாட்சிக்கும் மதசார்பின்மைக்கும் கிடைத்த வெற்றி என மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.இது தொடர்பாக முதல்வர் மு.க ஸ்டாலின் கூறியிருப்பதாவது:

அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவது, பழிவாங்கும் அரசியல் மற்றும் பல தடைகளைக் கடந்த 5 ஆண்டுகளில் பா.ஜ.க. உருவாக்கினாலும் - அத்தனையையும் துணிச்சலுடனும் உறுதியுடனும் எதிர்த்து நின்று ஹேமந்த் சோரன் வென்றுள்ளார். அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் அவரது தலைமையில் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை ஜார்க்கண்ட் மக்கள் தேர்தல் முடிவுகளில் வெளிப்படுத்தியுள்ளனர். இது மக்களாட்சிக்கும் மதச்சார்பின்மைக்கும் கிடைத்துள்ள மகத்தான வெற்றி என்று கூறியுள்ளார்.

### 2 மாநில சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளியீடு:

# மகாராஷ்டிராவில் மீண்டும் பா.ஜ.க. கூட்டணி வெற்றி

## ஜார்கண்ட்டில் ஜே.எம்.எம். கூட்டணி வெற்றி

மும்பை, நவ. 24-

**மகாராஷ்டிர மாநிலத்தில், பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைவிடவும் பாஜக தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது. ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆளும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா - காங்கிரஸ் கூட்டணி பாஜக தலைமையிலான கூட்டணியை வீழ்த்தி, மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.**

மகாராஷ்டிரம், ஜார்க்கண்ட் மாநிலங்களின் பேரவைத் தேர்தலும், 14 மாநிலங்களில் உள்ள 48 பேரவைத் தொகுதிகளுக்கும், வயநாடு உள்ளிட்ட 2 மக்களவைத் தொகுதிக்கும் நடந்த இடைத் தேர்தலிலும் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில், பாஜக தலைமையிலான மகாயுதி கூட்டணி பெரும்பான்மை என்ற 145 தொகுதிகளை விட அதிக இடங்களில் வெற்றியைப் பதிவு செய்திருக்கிறது. ஜார்க்கண்ட் பேரவைத் தேர்தலில் இன்டியா கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது.

மகாராஷ்டிர பேரவைத் தேர்தலில், பாஜக மட்டுமே 130 இடங்களில் வெற்றி பெற்று, மாநிலத்தின் தனிப் பெரும்பான்மை பெற்ற கட்சியாக உருவெடுத்துள்ளது. ஜார்க்கண்ட் மாநில பேரவைக்கு நடந்த தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், ஆரம்பத்தில் பாஜக கூட்டணி முன்னிலையில் இருந்து, பிறகு காட்சி மாறி, இன்டியா கூட்டணி வெற்றியைப் பதிவு செய்தது.

மகாராஷ்டிரத்தில் ஆளும் மகாயுதி கூட்டணியில், பாஜக, அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ், ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனை கட்சிகள் இணைந்து பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைக் கைப்பற்றியிருக்கின்றன. இக்கூட்டணி ஒட்டுமொத்தமாக 231 தொகுதிகளில் வெற்றி மற்றும் முன்னிலையில் உள்ளன. காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி மொத்தமுள்ள 288 தொகுதிகளில் பெரும்பான்மை பெற 145 இடங்களில் வெற்றி பெற வேண்டிய நிலையில் வெறும் 50 இடங்களில் வெற்றி அல்லது முன்னிலையில் உள்ளது

ஜார்க்கண்ட் பேரவையில் 41 இடங்களில் வெற்றி பெற்றால் ஆட்சி என்ற நிலையில், இன்டியா கூட்டணி 56 இடங்களில் வெற்றி அல்லது முன்னிலை வகித்து, மூன்றாவது முறை ஆட்சியைப் பிடித்திருக்கிறது. இதன் மூலம் ஹேமந்த் சோரன் தலைமையிலான கூட்டணி ஆட்சி ஜார்க்கண்ட்டில் மீண்டும் ஆட்சியமைக்கிறது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், ராஷ்ட்ரீய ஜனதா தளம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்த இன்டியா கூட்டணி 56 தொகுதிகளில் வெற்றி மற்றும் முன்னிலையை பதிவு செய்திருக்கின்றன. பாஜக தலைமையிலான கூட்டணி கட்சிகள் 24 தொகுதிகளில் வெற்றி மற்றும் முன்னிலையில் உள்ளன. இதர கட்சி ஒரு தொகுதியில் முன்னிலையில் உள்ளது.

ஜார்க்கண்டில் மொத்தமுள்ள 81 தொகுதிகளுக்கு இரு கட்டங்களாக கடந்த நவம்பர் 13, 20 ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தம் 2.60 கோடி வாக்காளர்களைக் கொண்ட இம்மாநிலத்தில் இரு கட்டங்களையும் சேர்த்து 67.74 சதவீத வாக்குகள் பதிவாகின. கடந்த 2000-இல் ஜார்க்கண்ட் உருவானதில் இருந்து பேரவைத் தேர்தலில் அதிகபட்ச வாக்குப்பதிவு இதுவாகும். முதல்வரும், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா செயல் தலைவருமான ஹேமந்த் சோரன் பர்ஹைத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

| மகாராஷ்டிரா சட்டசபை தேர்தல் | |
|---|---|
| மொத்த இடங்கள் | 288 |
| 1) பா.ஜனதா கூட்டணி | 221 |
| 2) ஷிண்டே (சிவசேனா) | 57 |
| 3) பிற கட்சிகள் | 10 |
| 4) பா.ஜ.க. (தனித்து) | 132 |
| 5) காங்கிரஸ் (தனித்து) | 16 |

| ஜார்கண்ட் சட்டசபை தேர்தல் | |
|---|---|
| மொத்த இடங்கள் | 81 |
| 1) ஜே.எம்.எம். கூட்டணி | 54 |
| 2) பா.ஜனதா கூட்டணி | 25 |
| 3) பா.ஜ.க. (தனித்து) | 21 |
| 4) காங்கிரஸ் (தனித்து) | 16 |
| 5) ஜே.எம்.எம். (தனித்து) | 34 |
| 6) ஆர்.ஜே.டி | 4 |

# அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வயநாட்டில் பிரியங்கா வெற்றி

வயநாடு, நவ. 24-

**வயநாடு இடைத்தேர்தலில் பிரியங்கா காந்தி சுமார் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் மூலம் இதற்கு முன் அங்கு வெற்றி பெற்ற ராகுல் காந்தியின் சாதனையை பிரியங்கா காந்தி முறியடித்துள்ளார்.**

| வயநாடு இடைத்தேர்தல் | | |
|---|---|---|
| 1) காங்கிரஸ்- (பிரியங்கா) | - 6,22,338 | வாக்குகள் |
| 2) சி.பி.ஐ. (சத்யன் மோகரி) | - 2,11,407 | வாக்குகள் |
| 3) பா.ஜனதா (நவ்யாஹரிதாஸ்) | - 1,09,939 | வாக்குகள் |
| 4) பிற கட்சிகள் | - 1,385 | வாக்குகள் |

வயநாடு மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட ராகுல் காந்தி, தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி நியமிக்கப்பட்டார். இதன்படி காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி, பாஜக வேட்பாளராக நவ்யா அரிதாஸ், இடதுசாரி கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு வேட்பாளராக சத்யன் மெகோரி களமிறங்கினர். இந்த சூழலில் வயநாடு இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று காலை முதல் எண்ணப்பட்டது.

இந்நிலையில், வயநாடு இடைத்தேர்தலில் அண்ணன் ராகுல் காந்தியின் சாதனையை தங்கை பிரியங்கா காந்தி முறியடித்துள்ளார். கடந்த மே மாதம் வயநாட்டில் நடந்த தேர்தலில் ராகுல் காந்தி 3.64 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்த நிலையில், தற்போதைய இடைத்தேர்தலில் பிரியங்கா காந்தி சுமார் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற்றுள்ளார். பிரியங்கா காந்தி மொத்தம் 6,22,338 வாக்குகள் பெற்று இமாலய வெற்றியை பதிவு செய்துள்ளார்.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| 1,961.32 | 557.35 |
| பாயிண்ட் 79,117.11 | பாயிண்ட் 23,907.25 |



**தங்கம்**
1 சவரன் ₹57,800
1 கிராம் ₹7,225



**வெள்ளி**
1 கிலோ ₹101,000
1 கிராம் ₹101.00

**டாலர்** ₹84.44

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# நெதன்யாகு எங்கள் நாட்டுக்கு வந்தால் கைது செய்வோம்

## இங்கிலாந்து அரசு அறிவிப்பு



**லண்டன், நவ. 24-**

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இங்கிலாந்துக்கு வந்தால் அவர் கைது செய்யப்படலாம் என்று இங்கிலாந்து அரசு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் போர் தொடுத்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் குழந்தைகள், பெண்கள் உள்பட 44 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

இஸ்ரேல் மீது போர்க் குற்ற புகார்கள் முன் வைக்கப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது. இதில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்து உள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இங்கிலாந்துக்கு வந்தால் அவர் கைது செய்யப்படலாம் என்று அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது குறித்து இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் செய்தித் தொடர்பாளர் கூறும் போது,

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இங்கு வந்தால் அவரை இங்கிலாந்து போலீசார் தடுத்து வைப்பார்களா என்பது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது. ஆனால் உள்நாட்டுச் சட்டம் மற்றும் உண்மையில் சர்வதேச சட்டத்தால் அமைக்கப்பட்டுள்ள அதன் சட்டப்பூர்வ கடமைகளுக்கு இங்கிலாந்து எப்போதும் இணங்கும். நாங்கள் சட்டத்தின் கீழ் எங்கள் கடமைகளை வெளிப்படையாக நிறைவேற்றுவோம் என்றார்.

இதன் மூலம் நெதன்யாகு இங்கிலாந்து வந்தால் அவர் கைது செய்யப்படுவார் என்று இங்கிலாந்து மறைமுகமாக தெரிவித்துள்ளது. அதே போல் கனடா, அயர்லாந்து, இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின், நார்வே, சுவீடன், பெல்ஜியம், துருக்கி உள்ளிட்ட நாடுகள் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கைது வாரண்டுக்கு இணங்கப் போவதாக தெரிவித்து உள்ளன.

### உக்ரைன் மீது தாக்குதல் தீவிரம்:

# ஹைப்பர் சோனிக் ஏவுகணையை அதிகம் தயாரிக்க புடின் உத்தரவு

**மாஸ்கோ, நவ. 24-**

உக்ரைனுக்கு உதவும் நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள ரஷ்ய அதிபர் புடின், உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை அதிகளவில் தயாரிக்க உத்தரவிட்டுள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிறது. இதில் உக்ரைனுக்கு அமெரிக்க உதவி வருகிறது. சமீபத்தில் முதல் முறையாக அமெரிக்க ஏவுகணையை பயன்படுத்தி ரஷ்யா மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியது.

இதனால் ஆத்திரம் அடைந்து உள்ள ரஷ்யா, போரில் முதல் முறையாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஐ.சி.பி.எம் ஏவுகணையை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியது. மேலும் உக்ரைனுக்கு உதவும் நாடுகளுக்கு ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தி இருக்கிறது. இதில் உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை அதிகளவில் தயாரிக்க புடின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து புடின் கூறியதாவது:-

ரஷ்யா தனது புதிய ஓரேஷ்னிக் ஹைப்பர்சோனிக் ஏவுகணையை போரில் சோதிக்கும். அந்த ஏவுகணைகள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. அமெரிக்க பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் பிரிட்டிஷ் க்ரூஸ் ஏவுகணைகளை ரஷ்யாவை தாக்க உக்ரைன் பயன்படுத்தி இருக்கிறது.

இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும். ரஷ்யாவிற்கு விடுக்கப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் நிலைமை மற்றும் தன்மையைப் பொறுத்து, போர் நிலைமைகள் உட்பட, இந்த சோதனைகளை நாங்கள் தொடருவோம். ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை பெருமளவில் தயாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சோதனை செய்யப்பட்ட ஆயுத அமைப்பு ரஷ்யாவின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு மற்றொரு உண்மையுள்ள உத்தரவாதமாகும். உலகில் வேறு எந்த நாடுகளிலும் இது போன்ற ஏவுகணை தொழில்நுட்பம் தற்போது இல்லை.

ஓரேஷ்னிக் ஏவுகணை தாக்குதல், முதன்முறையாக ரஷ்ய எல்லையில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து வழங்கிய ஏவுகணைகளைப் பயன்படுத்தி உக்ரைன் படைகளுக்கு நேரடியான பதிலடியாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார். ஹைப்பர் சோனிக் ஏவு கணைகளை அதிகளவில் தயாரிக்க புடின் உத்தரவிட்டுள்ளதால் வரும் நாட்களில் உக்ரைன் மீதான தாக்குதல் தீவிரமடையும் சூழல் ஏற்பட்டுள்ளது.

# 9 நாடுகளின் சுற்றுலா பயணிகளுக்கு விசா தேவையில்லை: சீனா அறிவிப்பு

**பெய்ஜிங், நவ. 24-**

ஜப்பான், பல்கேரியா, ருமேனியா உள்ளிட்ட 9 நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்கு விசா தேவையில்லை என சீனா அறிவித்துள்ளது.

இந்தியாவின் அண்டை நாடாக இருக்கும் சீனாவில் சுற்றுலாவை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கொரோனா பெருந்தொற்று காரணமாக முடங்கி கிடந்த சுற்றுலா துறை தற்போது புத்துயிர் பெற்றுள்ளது.

இதன்படி பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் 9 நாடுகளின் சுற்றுலா பயணிகளுக்கு விசா தேவையில்லை என சீனா அறிவித்துள்ளது. அந்த வகையில் ஜப்பான், பல்கேரியா, ருமேனியா, மால்டா, குரோஷியா, மாண்டினீக்ரோ, வடக்கு மாசிடோனியா, எஸ்டோனியா, லாட்வியா ஆகிய நாடுகளுக்கு இந்த சலுகை வழங்கப்பட்டுள்ளதாக சீனா வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் தெரிவித்தார். இவ்வாறு பயணம் மேற்கொள்பவர்கள் 30 நாட்கள் வரை சீனாவில் தங்கிக் கொள்ளலாம். இந்த திட்டம் வருகிற 30-ம் தேதி முதல் அமலுக்கு வரும் என கூறப்படுகிறது. இதன் மூலம் சீனாவுக்கு விசா இன்றி பயணம் மேற்கொள்ளும் நாடுகளின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது.

# திருப்பதியில் சீரமைக்கப்பட்ட பழமை வாய்ந்த ராமர் சிலை

**திருப்பதி,நவ. 24-**

திருப்பதியில் ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த ராமர் சிலை ஆகம முறைப்படி சீரமைக்கப்பட்டுள்ளது.

திருமலை திருப்பதியில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சிலைகளில் இருக்கும் சேதங்களை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி அடுத்த சீரமைப்பு பணி 2030-ம் ஆண்டுக்கு பிறகு நடைபெறும்.

இந்த சூழலில், அங்குள்ள ராமர் சிலையின் விரலில் சிறிய சேதம் ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த ராமர் சிலை ஒரு மலை உச்சியில் கண்டெடுக்கப்பட்டதாகவும், அது சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் தேவஸ்தானம் தரப்பில் கூறப்படுகிறது.

கடந்த 2021-ம் ஆண்டு நடந்த உற்சவத்தின் போது ராமர் சிலையில் சிறிய அளவிலான சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே, அதனை உடனடியாக சீரமைக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருப்பதியில் சிலைகளின் சீரமைப்பு பணி இன்னும் 5 ஆண்டுகளுக்கு பிறகே மேற்கொள்ளப்படும். இதனிடையே ராமர் சிலையில் ஏற்பட்ட சேதம் குறித்த தகவலை சமீபத்தில் நடந்த வருடாந்திர பிரம்மோற்சவத்தின்போது ஜீயர்கள், ஆகம ஆலோசகர்கள், பூசாரிகள் ஆகியோர் அடங்கிய குழுவினர் தேவஸ்தான அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதன் அடிப்படையில் ராமர் சிலையை ஆகம முறைப்படி சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 3-ம் உலகப்போர் துவங்கி விட்டது:

# உக்ரைன் முன்னாள் ராணுவ தளபதி ஜலுஷ்னி கருத்து

**கீவ், நவ. 24-**

ரஷ்யா - உக்ரைன் போர் நடைபெற்று வருவதற்கு மத்தியில் மூன்றாம் உலகப்போர் தொடங்கி விட்டதாக உக்ரைன் முன்னாள் ராணுவ தளபதியும் பிரிட்டனுக்கான தற்போதைய உக்ரைன் தூதருமான வலேரி ஜலுஷ்னி தெரிவித்துள்ளார்.

உக்ரைன்ஸ்கா பிராவ்டாவின் விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்ட உக்ரைன் முன்னாள் ராணுவத் தளபதி ஜலுஷ்னி கூறுகையில், ரஷ்யா - உக்ரைன் மோதலில் ரஷ்யாவின் நட்பு நாடுகள் நேரடியாக போரில் ஈடுபட்டிருப்பது மூன்றாம் உலகப்போர் தொடங்கி விட்டது என்று அர்த்தம் என்று பொலிட்டிகோ செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் 2024-ம் ஆண்டு மூன்றாம் உலகப் போர் தொடங்கி விட்டது.

10,000 வடகொரிய ஆயதக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் குர்ஸ்க் பகுதியில் நிலைநிறுத்தியிருப்பதாகவும், உக்ரைனுக்கு எதிராக ஈரானின் டிரோன்கள் மற்றும் பிற அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. இதனிடையே உக்ரைனில் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் போரில் தாக்குப்பிடித்து இருக்கிறது. ஆனால், போரில் தனியாக வெல்லுமா என்று உறுதியாக கூறமுடியாது.

வட கொரியாவைச் சேர்ந்த வீரர்கள் உக்ரைனுக்கு முன்னால் உள்ளனர். உக்ரைனில், ஈரானிய வீரர்கள் பொதுமக்களை எந்த வித பாரபட்சம் இல்லாமல் கொல்கிறார்கள். உக்ரைனின் ஆதரவாளர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் போர் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

ஆனால் உக்ரைன் போரை நிறுத்துவதுகூட இன்னும் சாத்தியம்தான். சில காரணங்களால், எங்கள் ஆதரவாளர்கள் இதை புரிந்து கொள்ள விரும்பவில்லை. உக்ரைனுக்கு ஏற்கனவே பல எதிரிகள் உள்ளனர் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் வலேரி ஜலுஷ்னி, உக்ரைனின் ராணுவ மற்றும் அரசியலில் முக்கிய புள்ளியாக இருந்து வருகிறார்.

# மராட்டியத்தில் பா.ஜ.க சரித்திர வெற்றி பெற்றுள்ளது: தமிழிசை


**சென்னை, நவ. 24-**

மராட்டிய சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. . இதில், ஆட்சி அமைக்க தேவையான தொகுதிகளையும் தாண்டி பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது. இதனை கொண்டாடும் வகையில், சென்னையில் உள்ள பா.ஜ.க. அலுவலகத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் வெற்றியை கொண்டாடினர்.

இந்நிலையில் தமிழக பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, இந்தியாவில் பலம் பொருந்திய மாநிலம் மகராஷ்டிரா. சின்ன இந்தியா என்றே சொல்லலாம். பலதரப்பட்ட மக்களும், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்தில் உள்ள மக்களும் கணிசமான மக்கள் தொகையோடு வாழக்கூடிய மாநிலம்.

பரவலாக பா.ஜ.க.விற்கு வெற்றி கிடைத்துள்ளது. இதை ஒட்டுமொத்த பாரதத்தின் குரலாக பார்க்கிறேன். மராட்டியத்தில் பா.ஜ.க. பெற்றுள்ள வெற்றி சரித்திர வெற்றி. மராட்டியத்தை பொறுத்தவரை, ராகுல் காந்தி, சரத் பவார் ஆகியோரின் பிரசாரம் கொஞ்சம் கூட எடுபடவில்லை. இன்று யாராலும் வெல்ல முடியாதவராக பிரதமர் இருக்கிறார் என்பது தேர்தல் முடிவுகள் மூலம் தெரிகிறது. இவ்வாறு கூறினார்.

## 24-11-2024




**மேஷம்:-** குழந்தைகளுக்கான மருத்துவச் செலவுகள் கூடும். வண்டி வாகனங்களில் செல்லும் போது மிகவும் எச்சரிக்கையுடன் நிதானமாகச் செயல்படுங்கள். எல்லாவிதத்திலும் செலவுகள் கூடும்.

**ரிஷபம்:-** வேலைகளை ஏனோ தானோ என முடிக்கும் சூழ்நிலை உருவாகும். பதறாத காரியம் சிதறாது. இயலாமை காரணமாக ஏற்படும் எரிச்சலைக் குறைத்தால், இரத்த அழுத்தம் எகிராது.

**மிதுனம்:-** தனவரவு கூடும். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைத்தால் மகிழ்ச்சிதானே ? புதிய நண்பர்கள் சேர்க்கையால், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும்.

**கடகம்:-** வீட்டிலும் வெளியிலும் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. அக்கறையுடன் படித்தால், கல்வித் தடைகளைத் தவிர்க்கலாம். பயணங்களில் கவனம் தேவை.

**சிம்மம்:-** தேவைக்கு அதிகமாகவே தனவரவு உண்டாகும். சீராக, நவநாகரீகமாக, மிடுக்காக உடை உடுத்தி, மற்றவர்களைக் கவரும் வண்ணம் நடந்துகொள்வீர்கள். உங்கள் தேஜஸ் கூடும்.

**கன்னி:-** நினைத்ததற்கு மாறாக வேறு இடத்திற்குப் பணிமாற்றம் ஏற்படலாம். மங்கையரால் ஏற்படும் செலவுகளால், கடன் பெறும் சூழ்நிலை ஏற்படலாம். உண்ணவும் நேரமின்றி உழைக்க நேரிடும்.

**துலாம்:-** கௌரவமும், மதிப்பும் கூடும். ஆசைகள் எல்லாம் நிறைவேறும். அதிகாரிகளின் ஆதரவால் பணிமுன்னேற்றங்கள் ஏற்படும். நம்பிக்கைக்கு உரியவர்களின் நட்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:-** சீரான வருமானத்தால் பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணியில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வும் கிடைக்கும்.

**தனுசு:-** தொழில் பயணங்களால் வெற்றி கிட்டும். ஆராய்ச்சி மேற்கொள்ளும் எண்ணம் எழும். வியாபாரிகளுக்கு, வாடிக்கையாளர்களின் ஆதரவால் இலாபம் அதிகரிக்கும்.

**மகரம்:-** வாகன சுகம் குறையும். முக்கிய விவகாரங்களை ஒத்திப் போடுவது நல்லது. உயர்அதிகாரிகளின் ஆணைகளை ஏற்று நடந்தால் பணியில் முன்னேற்றங்கள் இருக்கும்.

**கும்பம்:-** இனிய பேச்சால் எல்லாவற்றிலும். வெற்றி அடைவதோடு, அனைவரையும் கவர்வீர்கள். புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம்.

**மீனம்:-** பயணத்தில் சுகானுபவங்கள் ஏற்படும். நண்பர்கள் கேட்டவுடன் மறுக்காது உதவி செய்வர். கல்லூரிக் கனவுகள் நனவாகும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### மீண்டும் வனத்துறையின் கட்டுப்பாட்டில்

# வேட்டைத் தடுப்புக் காவலர்களை கொண்டு வர ஓ.பி.எஸ். கோரிக்கை

**சென்னை, நவ. 24-**

வேட்டைத் தடுப்புக் காவலர்களை மீண்டும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

தமிழக முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, தி.மு.க. அரசின் தேர்தல் அறிக்கை எண். 188-ல், அனைத்து நீர்வளங்களையும், வனம் உள்ளிட்ட இயற்கை வளங்களையும் பாதுகாக்கவும், கண்காணிக்கவும், அவை தொடர்பாக அரசின் சார்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் 75,000 இளைஞர்கள் பணி அமர்த்தப்படுவர். இவர்களில் 30 ஆயிரம் இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், உள்ளாட்சி அமைப்புகளில் நேரடியாக பணிபுரிந்து கொண்டு வந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் தனியார் நிறுவன ஒப்பந்தப் பணியாளர்களாக மாற்றப்பட்டுவிட்டனர். அந்த வரிசையில் தற்போது வனத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் பணியாற்றி வந்த ஆயிரக்கணக்கான வேட்டைத் தடுப்பு காவலர்களை தனியார் நிறுவன ஒப்பந்தப் பணியாளர்களாக மாற்றியுள்ளது தி.மு.க. அரசு.

அதாவது, ஒப்பந்த அடிப்படையிலான பணி என்றாலும், அரசிடம் இருந்து ஊதியம் பெற்று வந்த வேட்டைத் தடுப்பு காவலர்கள் தனியார் நிறுவனத்திடமிருந்து ஊதியம் பெறும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள். இதன்மூலம் வனத் துறைக்கும், வனத் துறையில் பணியாற்றி வரும் வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறி, அவர்களுடைய பணி நிரந்தரக் கோரிக்கையை நிராகரிப்பதற்காக இத்தகைய முடிவினை தி.மு.க. அரசு எடுத்துள்ளது.

காடுகளைப் பாதுகாக்கும் வகையில், வன விலங்குகள் சட்டவிரோதமாக வேட்டையாடப்படுவதைத் தடுத்தல், வனவிலங்குகளின் நடமாட்டத்தை கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணித்தல், மக்கள் இருக்கும் இடங்களுக்கு வரும் விலங்குகளை வனப் பகுதிக்கு திருப்பி அனுப்புதல் போன்ற முக்கியமானப் பணிகளை வேட்டை தடுப்புக் காவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால், சட்ட விரோதச் செயல்கள் நடப்பதற்கான வாய்ப்பு உருவாகும். தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்த முறையில் பணியமர்த்தியுள்ள தங்களை மீண்டும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வலியுறுத்தி வேட்டைத் தடுப்புக் காவலர்கள் கோவை, தலைமை வனப் பாதுகாவலரிடம் புகார் அளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

முதல்-அமைச்சர் அவர்கள் இதில் உடனடியாகத் தலையிட்டு, வனத் துறையில் பணியாற்றி வரும் ஆயிரக்கணக்கான வேட்டைத் தடுப்புக் காவலர்களை மீண்டும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவும், தேர்தல் வாக்குறுதியின்படி அவர்களை பணி நிரந்தரம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணர் திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 'இளஞ்சிவப்பு ஆட்டோ' திட்டம்:

# பெண்கள் விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

**சென்னை, நவ. 24-**

'இளஞ்சிவப்பு ஆட்டோ' திட்டத்திற்கு பெண் ஓட்டுநர்கள் விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் வசிக்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் 'இளஞ்சிவப்பு ஆட்டோக்கள்' திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்திற்காக பெண் ஓட்டுநர்கள் விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"பெண்களின் பாதுகாப்பில் தமிழ் நாடு சிறந்து விளங்குகின்றது. அதனை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற தமிழ் நாடு முதலமைச்சரின் உத்தரவின் பேரில், ஒரு புதிய முன்னெடுப்பாக 'இளஞ்சிவப்பு ஆட்டோக்களை' தமிழ் நாடு அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக பயணிக்க ஏதுவாக சென்னை மாநகரில் பெண் ஓட்டுநர்கள் மூலம் 250 ஆட்டோக்கள் இயக்கப்பட உள்ளன.

பெண்கள் சுய தொழிலில் சிறந்து விளங்க ஊக்கப்படுத்தவும், ஓட்டுநர் உரிமம் பெற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

அவசர காலங்களில் புகார் பெறப்பட்டவுடன், காவல் துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு ஒவ்வொரு இளஞ்சிவப்பு ஆட்டோவிலும், பெண்களின் பாதுகாப்பிற்காக காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட ஜிபிஎஸ் பொருத்தப்பட்டிருக்கும்.

இது தொடர்பாக, சென்னை மாநகரில் 250 இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் இயக்க சென்னையில் உள்ள தகுதியான பெண் ஓட்டுநர்கள், இத்திட்டத்தின் கீழ் பயனடைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை சென்னை மாவட்ட சமூக நல அலுவலர்கள் (வடக்கு மற்றும் தெற்கு). 8ஆவது தளம், சிங்காரவேலர் மாளிகை, சென்னை 600001 என்ற முகவரிக்கு 23.11.2024 தேதிக்குள் அனுப்ப வேண்டும் என கடந்த 22.10.2024 அன்று செய்தி வெளியிடப்பட்டது. தற்போது, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்கும் கால அளவு 10.12.2024 வரையில் நீட்டிப்பு செய்யப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தில் தகுதி பெற 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. தற்போது, அந்த தகுதி நீக்கப்பட்டுள்ளது.

# ஊரகத்திறனாய்வு தேர்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம்

## அரசு தேர்வு இயக்ககம் அறிவிப்பு

**சென்னை, நவ. 24-**

பல்வேறு தரப்பின் கோரிக்கையை ஏற்று ஊரகத் திறனாய்வு தேர்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டித்து அரசு தேர்வு இயக்ககம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அரசு தேர்வு இயக்ககம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில், தமிழகத்தில் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஊரகத் திறனாய்வு தேர்வு திட்டத்தின்கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி பள்ளிகளில் 9-ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இந்த திறனாய்வு தேர்வெழுத தகுதி பெற்றவர்களாவர். இந்த திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 50 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு ஆண்டுக்கு ரூ.1000 வீதம் 4 வருடங்கள் வழங்கப்படும்.

இந்த தேர்வை ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 9-ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் எழுதலாம்.

அவர்களது பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். அந்தவகையில் நடப்பாண்டுக்கான ஊரக திறனாய்வு தேர்வு டிசம்பர் 14-ம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பப் பதிவு நவம்பர் 12-ம் தேதி தொடங்கி 22-ம் தேதியுடன் நிறைவு பெற்றது. தற்போது பல்வேறு தரப்பின் கோரிக்கையை ஏற்று விண்ணப்பிக்கும் கால அவகாசம் நவம்பர் 25-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தேர்வெழுத விரும்பும் மாணவர்களின் தங்கள் பள்ளி தலைமையாசிரியர்கள் வாயிலாக துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். இதற்கு விண்ணப்பக் கட்டணமாக ரூ.10 செலுத்த வேண்டும். தொடர்ந்து மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட விண்ணபங்களை தலைமை ஆசிரியர்கள் தேர்வுத் துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

வரும் தகவல்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்:

# வாட்ஸ்-அப் வதந்திகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

**சென்னை, நவ. 24-**

கலைஞர் 100 வினாடி வினா போட்டியின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது என்று கலைஞர் 100 – வினாடி-வினா' போட்டி பரிசளிப்பு நிகழ்ச்சியில் தெரிவித்துள்ள முதல்வர் ஸ்டாலின், வாட்ஸ்-அப் வரும் தகவலை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும், அதில் வரும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

திமுக மகளிரணி சார்பில் நடைபெற்ற 'கலைஞர் 100 – வினாடி-வினா' போட்டி பரிசளிப்பு நிகழ்வு சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கட்சியின் தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் பேசியதாவது, திராவிட இயக்கக் கருத்துகளை இங்கு கூடியிருக்கும் இளைஞர்களின் நெஞ்சில் பதியம் போடும் வகையில் நடத்தப்பட்ட "கலைஞர் 100 – வினாடி-வினா" போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கும் இந்த விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். 'கலைஞர் 100' மட்டுமல்ல; இந்தத் தமிழ்நாடும் - தமிழினமும் 'கலைஞர் 1000'கூட கொண்டாடும்! ஏன் என்றால், தமிழ்நாட்டில் இருக்கும் பல கோடி மக்களுக்கு 'லைஃப்' கொடுத்தவர் தான், கலைஞர் இன்னும் 'லைவ்'-ஆக இருக்கிறார். தலைவர் கலைஞரின் வரிகளில் சொல்ல வேண்டும் என்றால், "ஒரு மனிதனின் வாழ்க்கை அவனுடைய மரணத்தில் இருந்துதான் கணக்கிடப்பட வேண்டும்" என்று சொல்வார். அப்படி, நிறைந்த பிறகும், தமிழர் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தான் நம்முடைய தலைவர் கலைஞர்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி, இந்த ஆண்டு நவம்பரில்தான் இந்தப் போட்டி நிறைவடைந்திருக்கிறது. சுமார் 14 மாத காலம் தமிழ்நாடு முழுவதும் திராவிட இயக்கத்தின் வரலாறு இளம்தலைமுறையிடம் விதைக்கப்பட்டிருக்கிறது! இந்தப் போட்டியின் கேள்விகளுக்கு பதில் தேடி, நீங்கள் தயாரானபோது, பழைய வரலாற்றைப் படித்திருப்பீர்கள். அதன்மூலம் புது சிந்தனைகள் உங்களுக்கு உருவாகியிருக்கும். இந்தச் சிந்தனைகள்தான் இந்த இயக்கத்தை தொடர்ந்து வழிநடத்தும்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இருந்து, இரண்டு லட்சத்துக்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கெடுத்த இந்தப் போட்டியின் வெற்றி என்பது, புது சிந்தனையாளர்களை உருவாக்குவதுதான். இரண்டு லட்சம் பேரைத் திராவிட இயக்கத்தைப் பற்றிப் படிக்க வைத்ததன் மூலம், இந்தப் போட்டியின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது.

இது வாட்ஸ்அப் யுகம். வாட்ஸ் அப்-இல், யாரோ ஃபார்வேர்டு செய்யும் செய்திகளை ஆராய்ந்து பார்க்காமல் உண்மை என்று நம்பும் ஒரு கூட்டம் இருக்கிறது. அதில் வரும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால், உண்மை வரலாறுகளை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அனைவரும் அனைத்துப் புத்தகங்களையும் படித்துவிட முடியாது. அவர்களுக்கு கேப்சூல் மாதிரி வரலாற்றை திரட்டி நாம் புகட்ட வேண்டும். அதற்கு, இதுபோன்ற போட்டிகள் மிகச் சிறந்த வழிமுறையாக இருக்கும்.

பேசிப் பேசி வளர்ந்த இயக்கம், இந்த இயக்கம். எழுதி எழுதி வளர்ந்த இயக்கம், இந்த இயக்கம். அப்படிப் பேச்சாளர்களை – எழுத்தாளர்களை இளந்தலைமுறையில் இருந்து உருவாக்க வேண்டும்.

புதிய புதிய செய்திகளை – புதிய புதிய கோணத்தில் சொல்ல வேண்டும். சொல் புதிது – சுவை புதிது – பொருள் புதிது – என்ற வகையில் சொல்ல வேண்டும். மிக நீண்ட வரலாற்றுத் தகவல்களைக்கூட மிகச் சுவையாக - மக்கள் மனதில் பதியும் வகையில் சொல்ல வேண்டும். நம்முடைய கொள்கை வீரர்களின் பேச்சு நறுக்கென்று இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டும். ஒருவரின் பேச்சு, மூளையை தொட வேண்டும்! அதன் மூலமாக, அவர்கள் மனதை ரீச் செய்ய வேண்டும்! அப்படி நீங்கள் அனைவரும் கருத்து சொல்லும் ஸ்டைல்-ஐ உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

போட்டியில் கலந்து கொண்ட நிறையபேர் இங்கு இருக்கிறீர்கள். நான் இப்போது சில கேள்விகளை உங்களிடம் கேட்கப்போகிறேன். பதில் தெரிந்தவர்கள் உட்கார்ந்தே சத்தமாகச் சொல்லுங்கள் போதும். லெனின்தான் உங்களிடம் கேள்வி கேட்டார். இப்போது ஸ்டாலின் கேட்கப்போகிறார். முதல் கேள்வி எளிமையானது – "மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு' என்று சொன்னது யார்? (தந்தை பெரியார்). இரண்டாவது கேள்வி - பேரறிஞர் அண்ணா அவர்கள் அறுவை சிகிச்சைக்கு முந்தைய நாள் டாக்டரிடம், "நான் படிக்கும் புத்தகத்தை, நாளை படித்து முடித்துவிடுகிறேன், அதன்பிறகு அறுவை சிகிச்சையை வைத்துக் கொள்ளலாம்" என்று சொன்னார். அது என்ன புத்தகம்? (மேரி கரோலி எழுதிய தி மாஸ்டர் கிறிஸ்டியன்). மூன்றாவது கேள்வி – தந்தை பெரியார் "எனது பகுத்தறிவு சமூகசீர்திருத்தப் பணியின் முன்னோடி" என்று யாரைச் சொன்னார்? (அயோத்திதாசப் பண்டிதர்).

இவை சாதாரண கேள்விகள்தான். இதுபோன்று அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில், தியாக வரலாற்றை – நம்முடைய இயக்கத்தின் வரலாற்றை மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் உங்களுடைய பணி அமைந்திட வேண்டும். அதற்கு இதுபோன்ற வினாடி-வினா நிகழ்ச்சிகள் நிச்சயமாகப் பயன்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்து, இதை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து.

நடத்திக்காட்டி, அதில் வெற்றி கண்டிருக்கும் நம்முடைய தங்கை கனிமொழி அவர்களுக்கும், அவருக்கு துணைநின்ற மகளிரணிக்கும், அனைவருக்கும் மீண்டும் மீண்டும் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னுடைய இதயப்பூர்வான நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

கர்நாடகா இடைத்தேர்தல்:

# 3 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி

**பெங்களூரு, நவ. 24-**

கர்நாடகாவில் 3 தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி அமோகமாக வெற்றி பெற்றுள்ளது.

ஜார்கண்ட் மற்றும் மராட்டியம் ஆகிய 2 மாநில சட்டசபை தேர்தலுடன் உத்தரபிரதேசம், அசாம், பீகார், குஜராத், கர்நாடகம், வயநாடு, மத்திய பிரதேசம், மேகாலயா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், மேற்கு வங்காளம், உத்தரகாண்ட், சத்தீஷ்கார் ஆகிய மாநிலங்களில் சட்டசபை இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தல்களில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இந்நிலையில், கர்நாடகாவில் 3 தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி அமோகமாக வெற்றி பெற்றுள்ளது.

சன்னபட்னா தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் சி.பி. யோகேஷ்வர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட மத்திய அமைச்சர் குமாரசாமி மகனை தோற்கடித்தார். சந்தூர் தொகுதியில் காங்கிரஸ் எம்.பி. துக்காராம் மனைவி அன்னபூர்ணா பா.ஜ.க.வின் பங்காரா ஹனுமந்தாவை தோற்கடித்துள்ளார். அதே போல, ஷிக்கான் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் யாசிர் அகமதுகான் தன்னை எதிர்த்து போட்டியிட்ட பா.ஜ.க. எம்.பி. பசவராஜ் பொம்மையின் மகனை தோற்கடித்துள்ளார்.

அரசியல் மாநாட்டிற்கு நிலம் வழங்கிய

# விவசாயிகளுக்கு விருந்தளித்த த.வெ.க. தலைவர் நடிகர் விஜய்

**சென்னை, நவ. 24-**

தனது முதல் அரசியல் மாநாட்டிற்கு நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு த.வெ.க. தலைவர் விஜய் விருந்தளித்தார்.

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை தொடங்கியிருக்கிறார். இந்த கட்சியின் முதல் மாநாடு கடந்த மாதம் 27-ந்தேதி விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டிற்கு வி.சாலை பகுதியில் சுமார் 170 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, மாநாடு பிரமாண்டமாக நடைபெற்றது. அதில் விவசாய நிலங்களும் அடங்கும். இந்த மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. மாநாட்டை தொடர்ந்து 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக்கழகம் தயாராகி வருகிறது. அதற்கேற்ப அரசியல் வியூகங்களை விஜய் அமைத்து வருகிறார்.

இந்த நிலையில், விக்கிரவாண்டியில் த.வெக. மாநாட்டிற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு விஜய், நேற்று விருந்து அளிக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. இதற்கான ஏற்பாடுகள் பனையூரில் உள்ள த.வெ.க. கட்சி அலுவலகத்தில் விறுவிறுப்புடன் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு மதியம் 1 மணியளவில் விஜய் வந்தடைந்தார். இதனை தொடர்ந்து நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு நன்றி தெரிவித்து விஜய் விருந்து அளித்தார். விஜய் விவசாயிகளுக்கு சைவ விருந்தளித்தார்.

உ.பி. கும்பமேளா ஏற்பாடுகள் குறித்து ஆய்வு:

# டிச. 13-ல் பிரதமர் மோடி பிரயாக்ராஜ் செல்கிறார்

## 3,000 சிறப்பு ரயில்கள் இயக்கம்

**புது டெல்லி, நவ. 24-**

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் வரும் ஜனவரியில் தொடங்கும் மகா கும்பமேளா ஏற்பாடுகளை ஆய்வு செய்ய பிரதமர் மோடி டிசம்பர் 13-ம் தேதி பிரயாக்ராஜ் செல்கிறார். இந்த கும்பமேளாவுக்கு நாடு முழுவதிலும் இருந்து சுமார் 3,000 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

உ.பி.யின் பிரயாக்ராஜில் ஒவ்வொரு வருடமும் கும்பமேளாவும் 12 வருடங்களுக்கு ஒருமுறை மகா கும்பமேளாவும் நடைபெறுகிறது. இந்நிலையில் வரும் 2025-ம் ஆண்டு ஜனவரியில் மகா கும்பமேளா தொடங்க உள்ளது.

இதையொட்டி முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பா.ஜ.க. அரசு ரூ.4 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து, விரிவான ஏற்பாடுகளை செய்து வருகிறது. மகா கும்பமேளாவுக்கு நாடு முழுவதிலும் இருந்து சுமார் 45 கோடி பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களது வசதிக்காக வழக்கமான 10,100 ரயில்களுடன் 2,917 சிறப்பு ரயில்களை ரயில்வே துறை இயக்க உள்ளது.

மொத்தம் 13,017 ரயில்கள் பிரயாக்ராஜுக்கு வந்து செல்லவிருக்கின்றன. உ.பி. முதல்வர் யோகிக்கு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுதிய கடிதத்தில் இத்தகவலை கூறியுள்ளார்.

மகா கும்பமேளா சிறப்பு ரயில்கள் தமிழகத்தில் சென்னை மற்றும் கன்னியாகுமரியில் இருந்தும் புறப்பட உள்ளன. இந்த சிறப்பு ரயில்கள் அனைத்தும் மகா கும்பமேளாவின் மவுனி அமாவாசை உள்ளிட்ட முக்கிய தினங்களில் இயங்க உள்ளன.

இதற்கிடையில் மகா கும்பமேளா ஏற்பாடுகளை ஆய்வு செய்ய பிரதமர் மோடி டிசம்பர் 13-ம் தேதி பிரயாக்ராஜ் செல்கிறார். அப்போது சில முக்கிய திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

முன்னதாக பிரயாக்ராஜ் அருகிலுள்ள ஷிருங்வேர்பூர் மடத்திற்கு பிரதமர் மோடி செல்கிறார். இந்த மடமானது, ராமாயணத்தில் ராமரை படகில் அழைத்துச் சென்ற நிஷாத்ராஜ் எனும் குகன் பெயரில் செயல்படுகிறது.

இங்கு குகனுடன் இணைந்த ராமரின் பிரம்மாண்ட சிலையை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். ஷிருங்வேர்பூரில் இருந்து பிரதமர் மோடி, கங்கை நதி வழியாக க்ரூஸர் வகை சிறிய கப்பலில் பிரயாக்ராஜுக்கு பயணிக்கிறார். பிரயாக்ராஜின் கங்கை ஆரத்தி நிகழ்ச்சியிலும் பிரதமர் கலந்து கொள்கிறார்.

வன்முறை அதிகரிப்பு:

# மணிப்பூருக்கு விரைந்த 20 ஆயிரம் ராணுவ வீரர்கள்

**இம்பால், நவ. 24-**

மணிப்பூரில் வன்முறை மீண்டும் அதிகரித்து வருவதால், 20 ஆயிரம் துணை ராணுவ வீரர்கள் அங்கு விரைந்துள்ளனர்.

மணிப்பூரில் முதல்வர் பைரேன் சிங் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடந்து வருகிறது. தங்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்து வழங்க வேண்டும் என மெய்டி சமூகத்தினர் நீண்டகாலமாக கோரி வருகின்றனர்.

மெய்டி மற்றும் கூகி சமூகத்தினர் இடையே மோதல் வெடித்தது. இது தொடர்ந்து வன்முறை, கலவரமாக மாறியது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக, இரு சமூகத்தினர் இடையே அடிக்கடி மோதல், வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன.

சமீபத்தில் ஜிரிபாம் மாவட்டத்தில் ஆயுதம் ஏந்திய கூகி சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள், பாதுகாப்புப் படையினருடன் சண்டையில் ஈடுபட்டனர். அதில், போராட்டக்காரர்கள், 10 பேர் கொல்லப்பட்டனர். இதனால் வன்முறை மீண்டும் தலைதூக்கியது. முதல்வர், அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் வீடுகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்நிலையில், வன்முறை மீண்டும் அதிகரித்து வருவதால், 20 ஆயிரம் துணை ராணுவ வீரர்கள் விரைந்துள்ளனர்.

கடந்த 10 நாட்களில், மாநிலம் முழுவதும் 90 ஆயிரம் பாதுகாப்பு படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து மணிப்பூர் மாநில பாதுகாப்பு ஆலோசகர் குல்தீப் கூறியதாவது:

நாங்கள் பாதுகாப்பை பலப்படுத்துவது தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடத்தினோம். இந்த கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களின் முக்கிய பகுதிகளில் பாதுாப்பை நாங்கள் மதிப்பாய்வு செய்தோம். ராணுவம், போலீஸ் மற்றும் சி.ஆர்.பி.எப்., அதிகாரிகள் பங்கேற்றனர். தற்போதைய நிலைமை குறித்து அவர்களுடன் ஆலோசித்தோம் என்று கூறினார்.

# விழுப்புரத்தில் வரும் 29-ம் தேதி சமூகநீதி போராளிகள் மணி மண்டப திறப்பு விழா

## ராமதாஸுக்கு அழைப்பு - அமைச்சர் பொன்முடி தகவல்

**விழுப்புரம், நவ.24-**

விழுப்புரத்தில் வரும் 29-ம் தேதி, முதல்வர் ஸ்டாலின் பங்கேற்கும், 21 சமூகநீதி போராளிகள் மணிமண்டப திறப்பு விழாவுக்கு தமிழக அரசு சார்பில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மற்றும் சமூகநீதி போராளிகள் குடும்பங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வழுதரெட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 21 சமூக நீதிப் போராளிகள் மணிமண்டபத்தையும், முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமியின் நினைவு அரங்கத்தையும் வரும் 29-ம் தேதி முதல்வர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

மேலும் அனறைய தினம், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இதையொட்டி, விழுப்புரம் தெற்கு தி.மு.க. மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் பொன்முடி, வரும் 29-ம் தேதி, விழுப்புரத்தில் நடைபெறும் ஏ. கோவிந்தசாமி நினைவரங்கம் மற்றும் 21 சமூகநீதி போராளிகள் மணிமண்டப திறப்பு விழாவில் தமிழக முதல்வர் பங்கேற்கிறார். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க, தமிழக அரசு சார்பில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மற்றும் 21 சமூகநீதி போராளிகள் குடும்பத்துக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# சபரிமலையில் ஆன்லைன் முன்பதிவை மேலும் உயர்த்த தேவஸ்தானம் முடிவு

**திருவனந்தபுரம்,நவ.24-**

சபரிமலையில் ஆன்லைன் முன்பதிவு எண்ணிக்கையை தினசரி 80 ஆயிரமாக அதிகரிக்க திருவிதாங்கூர் தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

நடப்பு மண்டல, மகர விளக்கு சீசனை முன்னிட்டு சபரிமலை ஐயப்பன் கோவில் நடை கடந்த 15-ம் தேதி மாலையில் திறக்கப்பட்டது. மறுநாள் முதல் பக்தர்கள் மாலை அணிந்து, விரதம் மேற்கொண்டு இருமுடி கட்டி சபரிமலைக்கு வந்து சாமி தரிசனம் செய்து வருகிறார்கள்.

இந்த ஆண்டு வழக்கத்தை விட பக்தர்களின் வருகை அதிகரித்து உள்ளது. நடை திறக்கப்பட்டு 7 நாட்களில் 4 லட்சத்து 80 ஆயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். இது கடந்த ஆண்டில் இந்த காலக்கட்டத்தில் சாமி தரிசனம் செய்தவர்களை விட 1.75 லட்சம் பேர் அதிகம்.

இந்த ஆண்டு ஆன்லைன் முன்பதிவு மூலமாக 70 ஆயிரம் பக்தர்கள், உடனடி தரிசன முன்பதிவு அடிப்படையில் 10 ஆயிரம் பக்தர்கள் என மொத்தம் 80 ஆயிரம் பக்தர்களுக்கு தினசரி தரிசன முன்பதிவு செய்யப்படுகிறது.

ஆனால் ஆன்லைன் முன்பதிவு செய்து வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் குறிப்பிட்ட இலக்கான 80 ஆயிரம் பக்தர்கள் சபரிமலைக்கு வருவதில்லை. அதாவது தற்போது சராசரியாக தினமும் 65 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே சாமி தரிசனத்திற்கு வருகிறார்கள்.

முன்பதிவு செய்த பக்தர்கள் கடைசி நேரத்தில் வர முடியாமல் போனால் தங்களது ஆன்லைன் முன்பதிவை ரத்து செய்ய திருவிதாங்கூர் தேவஸ்தானம் வலியுறுத்தி உள்ளது. அவ்வாறு ரத்து செய்யும் போது உடனடி முன்பதிவு செய்ய வரும் பக்தர்களுக்கு கூடுதல் எண்ணிக்கையில் வாய்ப்பு அளிக்க முடியும்.

அதே நேரத்தில் ஆன்லைனில் முன்பதிவு செய்து தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால் ஆன்லைன் முன்பதிவு எண்ணிக்கையை தினசரி 80 ஆயிரமாக அதிகரிக்க திருவிதாங்கூர் தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

இதற்காக கேரள ஐகோர்ட்டின் அனுமதிக்காக காத்து இருக்கிறது. ஐகோர்ட்டு அனுமதி கிடைத்தவுடன் ஆன்லைன் முன்பதிவு எண்ணிக்கை 80 ஆயிரமாக உயர்த்தப்படும் என தேவஸ்தானம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவின் அடுத்த முதல்வர்?

# ஏக்நாத் ஷிண்டே பதில்

**தானே, நவ. 24-**

பா.ஜ.க. தலைமையிலான ஆளும் மகாயுதி கூட்டணி பெரும்பான்மைக்கு அதிகமான இடங்களை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ள நிலையில், மகாராஷ்டிராவின் அடுத்த முதல்வர் யார் என்ற கேள்விக்கு தற்போதைய முதல்வர் ஏக்நாத் ஷிண்டே பதிலளித்துள்ளார்.

மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 288 தொகுதிகளுக்கும் கடந்த 20-ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் ஆளும் பாஜக, சிவசேனா (முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தரப்பு), தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார் தரப்பு) இணைந்து மகாயுதி கூட்டணியும், காங்கிரஸ், சிவசேனா (உத்தவ் தாக்கரே தரப்பு) தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார் தரப்பு) இணைந்து மகாவிகாஸ் அகாடி கூட்டணியும் களமிறங்கின.

ஒரேகட்டமாக நடந்த தேர்தலில் 4 ஆயிரத்து 131 வேட்பாளர்கள் களமிறங்கினர். இதில், 66.05 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த சூழலில் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகின.

இந்நிலையில் பா.ஜ.க. தலைமையிலான ஆளும் மகாயுதி கூட்டணி பெரும்பான்மைக்கு அதிகமான இடங்களில் வெற்றிப்பெற்று அங்கு மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது.

இதன்படி மொத்தம் 288 தொகுதிகளில் 222-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றது. மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆட்சி அமைக்க தேவைப்படும் பெரும்பான்மைக்கான இடங்கள் 145 ஆகும். இந்நிலையில் மகாயுதி கூட்டணி மாநிலத்தில் ஆட்சி அமைக்க உள்ள நிலையில், செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய மகாராஷ்டிரா முதல்வரும், சிவசேனா தலைவருமான ஏக்நாத் ஷிண்டே, "மகாராஷ்டிரா வாக்காளர்களுக்கு எனது நன்றிகள். இது மாபெரும் வெற்றி. மகாயுதி அமோக வெற்றி பெறும் என்று முன்பே கூறியிருந்தேன். அனைவருக்கும் நன்றி. சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் நான் மகாயுதி கட்சியின் சார்பில் நன்றி கூறுகிறேன். மகாராஷ்டிராத்தின் அடுத்த முதல்வர் யார் என்பது இதுவரை முடிவாகவில்லை. கூட்டணி கட்சியில் உள்ள மூத்த தலைவர்கள் பேசி அடுத்த முதல்வரை முடிவு செய்வார்கள்" என்று அவர் தெரிவித்தார்.

# பீகார் இடைத்தேர்தலில் பிரசாந்த் கிஷோரின் கட்சி படுதோல்வி

**பாட்னா, நவ. 24-**

பீகாரில் நான்கு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி படுதோல்வியை தழுவியுள்ளது.

பீகார் மாநிலத்தின் 4 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி ராம்கார், தராரி, பெலகஞ்ச் மற்றும் இமாம்கஞ்சு ஆகிய 4 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்று முடிந்தது. இதையடுத்து நேற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இந்த தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி உள்ளிட்ட கட்சிகள் போட்டியிட்டன. பீகாரில் புதிதாக கட்சி ஆரம்பித்து இருக்கும் பிரபல அரசியல் ஆலோசகர் மற்றும் தேர்தல் வியூக வகுப்பாளரான பிரசாந்த் கிஷோரின் ஜன் சூரஜ் கட்சியும் இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டது. பிற கட்சிகளை வெற்றி அடைய வியூகம் வகுக்கும் பிரசாந்த் கிஷோர் தனது கட்சியை நிச்சயம் வெற்றி பெற செய்வார் என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருந்தது. ஆனால் பீகாரில் இடைத்தேர்தல் நடைபெறும் 4 தொகுதிகளிலும் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது.

# ஜார்கண்ட் சட்டசபை தேர்தலில் முதல்வர் ஹேமந்த் சோரன் வெற்றி

**ராஞ்சி, நவ. 24-**

ஜார்கண்ட் சட்டசபை தேர்தலில் தான் போட்டியிட்ட பர்ஹைத் தொகுதியில் முதல்வர் ஹேமந்த் சோரன் வெற்றிப்பெற்றுள்ளார்.

ஜார்கண்டில் மொத்தமுள்ள 81 தொகுதிகளுக்கும் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. முதற்கட்ட தேர்தல் 14ம் தேதியும், 2ம் கட்ட தேர்தல் 20ம் தேதியும் நடைபெற்றது. ஜார்கண்டில் ஆளும் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான இன்டியா கூட்டணியும், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் மோதின. ஜார்கண்ட் சட்டசபை தேர்தலில் மொத்தம் 1,211 வேட்பாளர்களாக களமிறங்கினர். இத்தேர்தலில் 67.74 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த தேர்தலில் பர்ஹெத் தொகுதியில், முக்தி மோர்ச்சா கட்சி வேட்பாளராக அம்மாநில முதல்- மந்திரி ஹேமந்த் சோரனும், பாஜக வேட்பாளராக கமாலியேல் ஹெம்ப்ரோம் களமிறங்கினர். இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் வெளியானது. ஹேமந்த் சோரன் 72,216 வாக்குகள் பெற்று வெற்றிப்பெற்றுள்ளார். பாஜக வேட்பாளர் கமாலியேல் 45,358 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். இருவருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 26,858 ஆகும்.

# பீகார் இடைத்தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 4 தொகுதிகளில் வெற்றி

**பாட்னா, நவ. 24-**

பீகார் இடைத்தேர்தல் நடைபெற்ற 4 தொகுதிகளிலும் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

பீகார் மாநிலத்தில் உள்ள தராரி, இமாம்கஞ்ச், பெலாகஞ்ச் மற்றும் ராம்கர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளின் எம்.எல்.ஏ.க்கள் மக்களவைக்கு தேர்வான நிலையில், இந்த 4 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. கடந்த 13-ந்தேதி வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், நேற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

முன்னதாக தராரி மற்றும் பெலாகஞ்ச் தொகுதிகளில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களும், இமாம்கஞ்ச் தொகுதியில் 'இந்தியா' கூட்டணியில் அங்கம் வகிக்கும் ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி.) வேட்பாளரும், ராம்கர் தொகுதியில் பகுஜன் சமாஜ் வேட்பாளரும் முன்னிலை வகித்தனர்.

இந்நிலையில் அடுத்தடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கைகளின் முடிவில், 4 தொகுதிகளிலும் பா.ஜ.க. வேட்பாளர்கள் முன்னிலை பெற்று வெற்றியை உறுதி செய்துள்ளனர். பிரபல தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோரின் 'ஜன் சுராஜ்' கட்சி வேட்பாளர்கள் 3 தொகுதிகளில் டெப்பாசிட் இழந்தனர். ஆர்.ஜே.டி. கட்சியால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பெலாகஞ்ச் தொகுதியில், ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் வேட்பாளர் மனோரமா தேவி 21 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அதே தொகுதியில் போட்டியிட்ட ஜன் சுராஜ் வேட்பாளர் முகமது அம்ஜத் 17,285 வாக்குகளை பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது. இந்த இடைத்தேர்தல் வெற்றியின் மூலம் பீகாரில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி, மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் 200-க்கும் அதிகமான இடங்களில் அபார வெற்றி பெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் ராஜீவ் ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பாராளுமன்றத்தில் உங்கள் குரலாக இருக்க ஆவலுடன் காத்திருக்கிறேன். உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த நீங்கள் தேர்ந்தெடுத்த ஒருவர், உங்கள் நம்பிக்கைகளையும் கனவுகளையும் புரிந்துகொண்டு உங்களுக்காக போராடுவதை உறுதி செய்வதன் மூலம், உங்களில் ஒருவராகவே நீங்கள் உணர்வீர்கள் என்று உறுதி செய்கிறேன்.

**- பிரியங்கா காந்தி**



பலதரப்பட்ட மக்களும், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்தில் உள்ள மக்களும் கணிசமான மக்கள்தொகையோடு வாழக்கூடிய மாநிலம் மகாராஷ்டிரா. அங்கு பரவலாக பா.ஜ.க.விற்கு வெற்றி கிடைத்துள்ளது. இதை ஒட்டு மொத்த பாரதத்தின் குரலாக பார்க்கிறேன். மகாராஷ்டிராவில் பா.ஜ.க. பெற்றுள்ள வெற்றி சரித்திர வெற்றி.

**- தமிழிசை**



மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில், பணம் செல்வாக்குப் படைத்திருக்கிறது. ஏக்நாத் ஷிண்டேவின் அனைத்து எம்எல்ஏக்களும் எப்படி வெற்றி பெற முடியும்? மகாராஷ்டிர மக்களின் கோபத்துக்கு ஆளான அஜித் பவார் எப்படி வெற்றி பெற முடியும். இந்த தேர்தல் முடிவு, மக்களின் தீர்ப்பு என்று எங்கள் கட்சி ஏற்காது. இந்த தேர்தல் முடிவில் சந்தேகம் உள்ளது.

**- சஞ்சய் ராவத்**



ராஜஸ்தானில் தமிழக கபடி வீரர்களை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டு பிள்ளைகள் அடித்து விரட்டப்படுவார்கள் எனில் எங்கே இருக்கிறது ஒருமைப்பாடு? எப்படி வரும் நாட்டுப்பற்று?. இந்திய ஒற்றுமை, தேசப்பக்தி பன்முகத்தன்மை, இறையாண்மை என்றெல்லாம் பாடமெடுப்பவர்கள் இப்போது வாய் திறப்பார்களா?

**- சீமான்**

thinaboomi.com
தினபூமி, வேலூர்
நவம்பர் 24, 2024

நீலகிரி மாவட்டம் தெங்குமரஹாடா ஊராட்சியில்

# கிராம சபைக்கூட்டம்: பரிசலில் ஆற்றை கடந்து சென்று பங்கேற்ற கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு





ஊட்டி, நவ.24-

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் தெங்குமரஹாடா ஊராட்சிக்குட்பட்ட அரசு உயர் நிலைப் பள்ளியில் நேற்று (23.11.2024) நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு மாயார் ஆற்றினை பரிசலில் கடந்து சென்று சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இக் கூட் டத் தில், மாவட்ட கலெக்டர் தலைமையில், பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சமூக தீமை நிராகரிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

மேலும், பெண்குழந்தைகளை பாதுகாப்போம் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தெங்குமரஹாடா பள்ளி வளாகத்தில் அக்ஷயா என்ற பெண் குழந்தையின் பெயரில் மரக்கன்றுகளை நடவு செய்து, கிராம ஊராட்சியில் சிறப்பாக சேவை புரிந்த 9 தூய்மை காவலர்களுக்கும், சிறப்பாக செயல்பட்ட 1 மகளிர் சுய உதவிக்குழுவிற்கும் வேட்டி மற்றும் சேலைகளை வழங்கி கலெக்டர் பாராட்டினார். இந்த கிராம சபை கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, உள்ளாட்சி தினத்தையொட்டி, சிறப்பு கிராம சபைக் கூட்டம் இன்று தெங்குமரஹாடா ஊராட்சியில் நடைபெற்று கொண்டிருக்கிறது. அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தெரிந்துகொண்டு பயன்பெற வேண்டும். தகுதி வாய்ந்த பயனாளிகள் எவரும் விடுபடாத வகையில் அனைவருக்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் கிடைப்பதை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். பொதுமக்கள் இன்று வழங்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கை மனுக்களையும் அந்தந்த துறை அலுவலர்களுக்கு அனுப்பி, அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படும் என்றார்.

முன்னதாக, கல்லம்பாளையம் கீலூர் பகுதியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பிரதம மந்திரி ஜென்மம் திட்டத்தின் கீழ் தலா 5.07 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 5 வீட்டின் கட்டுமான பணிகளையும், அதே பகுதியில் கட்டப்பட்டு வரும் 4 வீடுகளின் கட்டுமான பணிகளையும் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, கல்லாம்பாளையம் மேலூர் பகுதியில் பிரதம மந்திரி ஜென்மம் திட்டத்தின்கீழ், கட்டப்பட்டுள்ள 4 வீடுகளின் கட்டுமான பணிகளையும், ரூ.1 இலட்சம் மதிப்பில் சீரமைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் ரூ.16 இலட்சம் மதிப்பில் பகுதிநேர நியாய விலை கடை கட்டப்படவுள்ள இடத்தினையும், ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின்கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகத்தினையும், புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தின் கட்டுமான பணியினையும், கல்லாம்பாளையம் அரசு உண்டு, உறைவிடப் பள்ளி வகுப்பறைகளையும், தெங்குமரஹாடா அரசு உயர்நிலைப்பள்ளியில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகத்திலுள்ள கணினி மூலம் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பயிற்சிகளை பார்வையிட்டு, முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தின்கீழ் மாணவ, மாணவியர்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டுள்ள உணவு பொருட்களின் இருப்பு மற்றும் அதற்குண்டான பதிவேடுகளை பார்வையிட்டார்.

அது மட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியிலுள்ள வகுப்பறைகள் மற்றும் அடிப்படை வசதிகளை பார்வையிட்டு,

ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சேதமடைந்து தடுப்புச் சுவரினை சீரமைத்து தர வேண்டும் எனவும், பள்ளியின் ஒரு பகுதியின் கட்டிடத்தினை உள்ளாட்சித்துறையின் மூலம் சீர்செய்து தர வேண்டும் எனவும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த கள ஆய்வின் போது, மாவட்ட கலெக்டர் கல்லாம்பாளையம் பகுதியிலுள்ள கீலூர் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, அப்பகுதியில் சமுதாயக் கூடம் அமைப்பது தொடர்பான சாத்தியகூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தி, அப்பகுதியிலுள்ள பழங்குடியின பொதுமக்களுக்கு குடும்ப அட்டை மற்றும் பழங்குடியினர்களுக்கான சாதி சான்றிதழ்கள் உள்ளதா என்பது குறித்து கேட்டறிந்து, கல்லாம்பாளையம், மேலூர், கீலூர் ஆகிய பகுதிகளில் பிரதம மந்திர ஜென்மம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள குடியிருப்புகள் கட்டும் பணிக்கு எத்தனை பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர் என்பது குறித்தான விவரங்களை கேட்டறிந்தார்.

இறுதியாக தெங்குமரஹாடா அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்று கொண்டிருந்த வாக்காளர் சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு, பெயர் சேர்த்தல், நீக்குதல் உள்ளிட்ட பணிகளுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வுகளின்போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், துணை இயக்குநர் முதுமலை புலிகள் காப்பகம் அருண் குமார், குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) நந்தகுமார், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் சரவணகுமார், மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் தேவகுமார், கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுப்பிரமணியன், விஜயா, அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் (பொ) வினோதினி மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம் ராஜன் நகர் ஊராட்சியில்

# உள்ளாட்சிகள் தின கிராம சபை கூட்டம்: சிறப்பு பார்வையாளராக கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா பங்கேற்பு



ஈரோடு, நவ.24-

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ராஜன் நகர் ஊராட்சி கஸ்தூரிபா துவக்கப்பள்ளி வளாகத்தில், உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்றத் தலைவர் சந்திராமணி தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது,

கிராம சபை கூட்டமானது, ஆண்டுதோறும் சுதந்திர தினவிழா, குடியரசுதின விழா, மே தினம், காந்திஜெயந்தி, உலக தண்ணீர் தினம் மற்றும் உள்ளாட்சிகள் தினம் ஆகிய நாட்களிலும் மற்றும் சிலமுக்கியமான தினங்களில் நடைபெற்று வருகிறது. அதன்படி, ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ளாட்சிகள் தினமான 01.11.2024-ம் தேதியன்று நடைபெறவிருந்த கிராம சபைக்கூட்டங்கள் நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டு, இன்றைய தினம் (23.11.2024) அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெறுகிறது.

இந்த கிராம சபை கூட்டத்தில், கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பித்தல், கிராம ஊராட்சிகளில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களை கௌரவித்தல், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், மாகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஜல் ஜீவன் இயக்கம், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம், கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு, கூட்டாண்மை வாழ்வாதாரம் மற்றும் இதர பொருட்கள் உள்ளிட்ட கூட்டப்பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டவுள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக, எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு அரசு பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான காலை உணவுத்திட்டம், இத்திட்டத்தின் மூலமாக குழந்தைகள் பயன்பெறுவதுடன் தாய்மார்களின் வேலைப்பளுவும் வெகுவாக குறைகிறது. மேலும் பெண்கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் அரசுப்பள்ளிகளில் படித்து உயர்க்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1000/- வழங்கப்பட்டு வருவதால் மாணவியர்கள் புத்தகம் வாங்குவது, சேமிப்பு மேற்கொள்ளவது, உயர்கல்வி பயில என பல்வேறு வகையில் பயனுள்ளதாக உள்ளது.

மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் மூலம் ரூ.1000/- வழங்கப்பட்டு எண்ணற்ற பெண்கள் பயன்பெற்று வருகிறார்கள். இதே போன்று, பல்வேறு தமிழ்நாடு அரசின் திட்டங்கள் அனைத்தும் ஈரோடு மாவட்டத்தில் அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது, மழைக்காலம் துவங்கியுள்ளதால், டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. இதனை தவிர்ப்பதற்கு முக்கியமான ஒன்று நமது வீட்டினை தூய்மையாக வைத்துக்கொள்வது மட்டுமன்றி சுற்றுப்புறத்தினையும் தூய்மையாக பராமரிப்பதாகும். வீட்டின் முன்புறம், பின்புறம் மற்றும் வீட்டை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள தேவையற்ற நீர் தேங்கும் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். மேலும், அவ்வாறு சேகரிக்கும் தேவையற்ற பொருட்களை உடனடியாக துப்புரவு பணியாளர்கள் கொண்டு வண்டியில் வைத்து குப்பைக்கிடங்கிற்கு கொண்டு செல்ல வேண்டும்.

குடிநீர் பாத்திரங்கள் தவிர மற்ற அனைத்து நீர் சேகரித்து வைக்கும் சிமெண்ட் தொட்டி, கீழ்நிலை தொட்டி, மேல்நிலைத்தொட்டிகள் மற்றும் பானைகள் போன்றவற்றில் கொசுப்புழு கண்டறியப்பட்டால், நீர்றனை முழுவதுமாக கொட்டி, பிளீச்சிங் பவுடர் கொண்டு நன்கு தேய்த்து கழுவி, 24 மணிநேரம் கழித்து மீண்டும் பயன்படுத்த வேண்டும்.

நீர் சேகரித்து வைக்கும் அனைத்து பாத்திரங்களிலும், கொசு புகாதவண்ணம், நன்கு மூடிவைக்க வேண்டும். மேலும், காய்ச்சல் அறிகுறி ஏதேனும் ஏற்பட்டால் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், ராஜன் நகர் ஊராட்சி கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முன்மாதிரி ஊராட்சியாக சிறந்து செயல்பட வேண்டும். அதற்கு அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதுடன் அவர்களின் பணிக்கு பொதுமக்களும் முழு ஒத்துழைப்பினை வழங்குவதுடன் ஊராட்சியின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் பொதுமக்கள் ஊராட்சியின் வளர்ச்சிக்கு முழு பங்காற்றிட வேண்டுமென தெரிவித்தார்.

தொடர்ந்து, கலெக்டர் , ராஜன் நகர் ஊராட்சியில் சிறப்பாக பணியாற்றும் துய்மை காவலர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு சால்வை மற்றும் நினைவு பரிசுகளை வழங்கி, பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்து, பெறப்பட்ட மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) பழனிவேல், மாவட்ட சமூக நல அலுலவர் சண்முகவடிவு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுலவர் பூங்கோதை, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) மரகதமணி, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) பிரியா, துணைத்தலைவர் விஜயலட்சுமி, சத்தியமங்கலம் வருவாய் வட்டாட்சியர் சக்திவேல், சத்தியமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அப்துல் வகாப், ராதாமணி உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# லக்காபுரம் ஊராட்சியில் கிராம சபா கூட்டம்



ஈரோடு நவ.24-

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் லக்காபுரம் ஊராட்சி கிராம சபை கூட்டம் குமராபாளையம் ஆதி காலனியில் உள்ள சமுதாய கூட வளாகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.பி. சாலை மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்களுக்கு 13 தூய்மை காவலர்கள் மற்றும் 5 தூய்மை பணியாளர்கள் ஆகியோருக்கு அவர்களின் பணியை பாராட்டி சால்வை அணிவித்து பரிசு வழங்கப்பட்டது. கூட்டத்தில் துணைத் தலைவர் எஸ்.தங்கமணி சீனிவாசன், வார்டு உறுப்பினர்கள் எஸ்.முருகன், வி.ஆர்.சதாசிவம், எஸ்.கிருஷ்ணவேணி, ஈ.வி. கௌரி சங்கர், எஸ்.கண்ணகி, பி.சாந்தி, பி.பாலசுப்பிரமணியன், ஆர். பிரசாத், எம். மேனகா, எம்.ரமேஷ், எஸ். துளசிமணி உட்பட பலர்கலந்து கொண்டனர் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டது கூட்ட முடிவில் செயலாளர் எஸ். பூபதி நன்றி கூறினார்.



**ஈரோடு மாவட்டம் துய்யம்பூந்துறை ஊராட்சி கிராம சபை கூட்டம் தலைவர் பி.பேபி தலைமையில் டி.மேட்டுப்பாளையம் கிராம நிர்வாக அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய குழுத் துணைத் தலைவர் டி மயில் (எ) சுப்பிரமணி ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி செயலாளர் தியனேஸ்வரன் கலந்து கொண்டனர் கூட்டத்தில் பொதுமக்களிடம்மனுக்கள் பெறப்பட்டது மேலும் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது**



**ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எழுமாத்தூர் ஊராட்சியில் கிராம சபாகூட்டம் ஊராட்சி தலைவர் எஸ்.ஈஸ்வரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது துணைத் தலைவர் தனபால் வரவேற்றார். இதில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது தொடர்ந்து 13 தூய்மை பணியாளர்கள் பாராட்டப்பட்டனர். இக்கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர் கவுசல்யா குணசேகரன் மற்றும் வாழ்வு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் கூட்டத்தின் முடிவில் செயலர் டி.லோகநாதன் நன்றி கூறினார்.**

# ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு தலைவராக எம்.ஜூபைர் அகமது நியமனம்



ஈரோடு நவ 24-

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே முன்னாள் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி, அகில இந்திய காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு தலைவர் இம்ரான் பிரதாப் கர்கி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப் பெருந்தகை ஆகியோர்கள் நல்லாசியுடன் தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவரும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான ஈ வி கே எஸ் இளங்கோவன் அனுமதியுடன் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மைத் துறை தலைவராக லக்காபுரத்தை சார்ந்த எம். ஜூபைர் அகமது இரண்டாவது முறையாக தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு தலைவர் எச்.முகமது ஆரிப் நியமனம் செய்துள்ளார்கள்புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஈரோடு மாநகர் மாவட்ட சிறுபான்மை துறை தலைவர் எம் ஜூபைர் அகமதுக்கு காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்

# முதல்வர் மருந்தகம் அமைக்க வரும் 30-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்: மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராஜ்குமார் தகவல்

ஈரோடு நவ24-

ஈரோடு மாவட்டத்தில் முதல்வர் மருந்தகம் அமைக்க இணையதளம் மூலம் வரும் 30-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் . க. ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.தமிழக முதலமைச்சர் 15.08.2024 சுதந்திர தினவிழா உரையில், “பொதுப்பெயர் (ஜெனரிக்) மருந்துகளையும் பிற மருந்துகளையும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும்” என அறிவித்தார்.அதன்படி முதல்வர் மருந்தகம் அமைக்க விருப்பமுள்ள B.Pharm/D.Pharm சான்று பெற்றவர்கள் அல்லது அவர்களின் ஒப்புதலுடன் தமிழகம் முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதல்வர் மருந்தகம் அமைக்க www.mudhalvarmarundhagam.tn.gov.in கலாம். முதல்வர் மருந்தகம் அமைக்க விருப்பம் உள்ள தொழில்முனைவோர் நாளிதழ்களில் அறிவித்திருந்த நிலையில் தற்போது பொதுமக்கள் நலன் கருதி. 30.11.2024 வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அனைவரும் இவ் வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு தெரிவித்தார்.



**நீலகிரி மாவட்டம், கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட சி.எஸ்.ஐ. பொறியியல் கல்லூரியில் நேற்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் முகமது ரிஷ்வான் ஆய்வு செய்தார். உடன் கேத்தி பேரூராட்சி செயல் அலுவலர் நடராஜ், தலைவர் ஹேமாமாலினி மற்றும் வார்டு உறுப்பினர்கள், அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் உள்ளனர்.**



**ஈரோடு மாவட்டம் நஞ்சை ஊத்துக்குளி ஊராட்சியில் கிராம சபை கூட்டம் தலைவர் சி.சுகுணா தேவி சிதம்பரம் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் ஆர்.பரமசிவம் வரவேற்றார். கூட்டத்தில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது தொடர்ந்து சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இதில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆர்.ஜெகநாதன், என்.சுபத்ரா, கே.சாரதா, டி.கோபிநாத் பி ராதிகா, ஏ.சங்கர் குமார், என்.சுமதி, எஸ்.பழனியம்மாள், ஜே.சபீனா, எஸ்ஏ.சரவணன் கலந்து கொண்டனர்.**



**ஈரோடு மாவட்டம் 60 வேலம்பாளையம் ஊராட்சி கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் வி.செல்வி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 16தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் துணைத் தலைவர் கே. மயில்சாமி, ஒன்றிய குழு உறுப்பினர் சண்முகம், கலந்து கொண்டனர். செயலாளர் எம்வி.சரவணன் நன்றி கூறினார்.**

### ஜமீன் கூடலூர் கிராமத்தில்

## காலபைரவர் கோவிலில் வருடாபிஷேக திருவிழா

### துணை சபாநாயகர் கு.பிச்சாண்டிக்கு தரிசனம்



**திருவண்ணாமலை, நவ.24 -** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் ஆவூர் அருகே உள்ள ஜமீன் கூடலூர் பைரவபுரத்தில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் அருள்மிகு ஸ்ரீமஹா காலபைரவர் ஜென்மாஷ்டமி மற்றும் 4ம் ஆண்டு வருடாபிஷேக திருவிழா நேற்று நடைபெற்றது.

இந்த விழாவையொட்டி கோவிலில் நான்கு கால யாக பூஜையில் வைக்கப்பட்ட கலசங்கள் ஸ்ரீமஹா காலபைரவர் பெருமானுக்கு பால் தயிர் சந்தனம் உள்ளிட்ட நறுமண பொருட்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. இந்த வருடாபிஷேக திருவிழாவுக்கு ஸ்ரீமஹாகால பைரவர் ஞானபீடத்தின் ஸ்ரீலஸ்ரீ பரமானந்த சிவ சுவாமிகள் தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார். அப்போது அவருக்கு கோவில் சார்பில் பரிவட்டம் கட்டப்பட்டு பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டது. முன்னதாக துணை சபாநாயகர் கு.பிச்சாண்டிக்கு பெண்களின் கோலாட்டத்துடன் மேளதாளம் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த விழாவில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஆராஞ்சி ஏ.எஸ்.ஆறுமுகம் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஆர்.ராஜேந்திரன் எம்.எஸ்.அனுராதாசுகுமார் எஸ்.சூர்யா திருவண்ணாமலை ஒன்றிய செயலாளர் சி.மாரிமுத்து, கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) எஸ்.அருணாசலம் புதுச்சேரி பாஜக மாநில பொதுச் செயலாளர் எஸ்.மோகன்குமார் புதுவை நிலக்கிழார் ஆர்.வெங்கடகிருஷ்ணன் ஊராட்சி மன்ற தலைவர்கள் எஸ்.ஜப்பார் தனபால் உறுப்பினர் முருகன் தொழிலதிபர்கள் சக்திவேல் மாதேஸ்வரன் ஸ்ரீமஹா காலபைரவர் பொருளாளர் டாக்டர் கதிவேல் சென்னை மேடவாக்கம் வி.சுப்பிரமணியன் எஸ்.ரமேஷ் ஜமீன் கூடலூர் வி.கே.ஏழுமலை தொண்டு நிறுவன பிரதிநிதி பி.கே.ஏழுமலை உள்பட ஆன்மீக பிரமுகர்கள் பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் சுவாமி பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டது. முடிவில் டிரஸ்ட் தகவல் தொடர்பாளர் ஏ.ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்




**ராணிப்பேட்டையில் உள்ளாட்சிகள் தினத்தையொட்டி சோளிங்கர் வட்டம் போளிப்பாக்கம் ஊராட்சியில் நடத்தப்பட்ட கிராமசபை கூட்டத்தில் கலெக்டர் சந்திரகலா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் முனிரத்தினம், திட்ட இயக்குநர் ஜெயசுதா, ஒன்றியக் குழுத் தலைவர் கலைகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் நாகராஜு, வருவாய் கோட்டாட்சியர் ராஜராஜன் மற்றும் பலர் உள்ளனர்**

## மேல்பட்டு மலை கிராமத்தில் சிறப்பு மருத்துவ முகாம்: மு.பெ.கிரி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



**செங்கம் நவ.24** ஜவ்வாதுமலை ஒன்றியம் மலை கிராமமான மேல்பட்டு கிராமத்தில் தமிழக பொது சுகாதாரத்துறை மற்றும் நோய் தடுப்பு துறை புலியூர் ஆரம்ப சுகாதார நிலையம் வேலூர் விஐடி நிலையான ஊரக வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி கல்வி மையம் கிராம வளர்ச்சி மையம் ஆகியவை இணைந்து கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. முகாமிற்கு வேலூர் விஐடி இணை இயக்குனர் சுந்தர்ராஜன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் தென்மலை அத்திப்பட்டு சிவசேமன் புலியூர் அன்பழகன் கல்லாத்தூர் வழக்கறிஞர் சிவானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக செங்கம் தொகுதி எம்எல்ஏ மு.பெ.கிரி கலந்துகொண்டு முகாமினை குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்து தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கி பேசினார்.

வட்டார மருத்துவ அலுவலர் செல்வக்குமரன் பொது மற்றும் இருதய மருத்துவர் பாஸ்கர் மருத்துவ அலுவலர் நிதின் நடமாடும் மருத்துவக் குழு அலுவலர் சண்முகம் ஆர்பிஎஸ்கே மருத்துவ அலுவலர்கள் சௌமிகா தினேஷ் குமார் பல் மருத்துவர் செந்தமிழ் கண் மருத்துவர் கருத்தப்பாண்டி சுகாதார ஆய்வாளர் சக்திவேல் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவ குழுவினர்கள் பரிசோதனை மற்றும் சிகிச்சை மருந்துகள் வழங்கினர்.

முன்னதாக உதவி திட்ட அலுவலர் பார்த்திபன் வரவேற்றும் முடிவில் திட்ட உதவியாளர் செல்வராஜ் நன்றி கூறி பேசினர். முகாமில் வனச்சரகர் சுரேஷ் மருத்துவத்துறை சமூக நலத்துறையினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## செங்கம் விவேகானந்தா பள்ளியில் அறிவியல் இயக்க கூட்டம்



**செங்கம் நவ.24** செங்கம் விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் இயக்க கூட்டம் நடந்தது.

நிகழ்ச்சிக்கு பள்ளி நிர்வாக குழு உறுப்பினர் சந்தோஷ் பிரபு தலைமை தாங்கினார். முதல்வர் ராஜீவ் காந்தி துணை முதல்வர் திருப்பதி முன்னிலை வகித்தனர்.

அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் காத்தவராயன் பள்ளி நூலகத்திற்கு அறிவியல் சார்ந்த புத்தகங்களை வழங்கி வருகிற டிசம்பர் மாதம் நாச்சிப்பட்டு ஸ்ரீ சக்தி பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெறும் 32வது மாவட்ட அறிவியல் மாநாட்டில் மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் அறிவியல் படைப்புகளை காட்சிப்படுத்த ஆலோசனைகள் மாதிரிகளை வழங்கிப் பேசினார். கூட்டத்தில் ஆன்மீக சொற்பொழிவாளர் தனஞ்செயன் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பழனி ஆசிரியர் மதிவாணன் அறிவியல் ஆசிரியர்கள் பானுமதி நூர்ஜகான் கீதா பானுமதி ஏழுமலை டிக்காரம் ஆகியோர் கலந்து கொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# வேளையம்பாக்கம் பகுதியில் சிமெண்ட் சாலைகள் அமைத்து தரப்படும்: சிறப்பு கிராம சபா கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு உறுதி



**திருவண்ணாமலை, நவ.24 -** திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட, வேளையம்பாக்கம் ஊராட்சியில் சிறப்பு கிராம சபைக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் தெ.பாஸ்கரபாண்டியன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, சி.என்.அண்ணாதுரை எம்பி மு.பெ.கிரி எம்எல்ஏ, மாநில தடகளச் சங்கத் துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகிக்க மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் இரா.மணி அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகையில் வேளையம்பாக்கம் ஊராட்சியில் இந்த சிறப்பு கிராம சபைக் கூட்டம் இன்றையதினம் நடைபெறுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியில் அரசின் பொருளாதாரம் மற்றும் தனி மனிதனின் பொருளாதாரம் தன்னிறைவு பெற்று வளர வேண்டும் என்று கருதுகிறார்.

நமது தமிழ் சமூகம் சிந்தனை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கதால் உயர வேண்டும் என்றும் கருதுகிறார்கள். இந்தியாவின் உயிர் ஒரு கிராமம் ஊராட்சி தான். முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய சமமான ஆட்சி நடத்த வேண்டும் என்று கருதினர் அதை நிறைவேற்றி கொண்டிருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி தான் திராவிட மாடல் ஆட்சி.

பிரிட்டிஷ் காரர்கள் 250 ஆண்டுகள் ஆட்சி நடத்தினார்கள். பின்னர் 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் கிராம ஊராட்சிகள் என்று கிடையாது. 1950 ஆம் ஆண்டு பஞ்சாயத்து சட்டம் என்ற சட்டம் முதன் முதலில் உருவாக்கப்பட்டது. பின்னர் 1958 ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்து சட்டம் அமைக்கப்பட்டு அதன் மூலம் சட்டத் திட்டங்கள் உருவாக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1994 ஆம் ஆண்டு பஞ்சாயத்து ராஜ் என்ற சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த சட்டத்தின் வாயிலாக ஊராட்சி மன்ற தலைவரை தேர்ந்தெடுக்கிறோம். அதன்மூலம் கிராமங்களில் உள்ள மக்கள் தங்கள் பிரச்சனைகளை ஊராட்சிமன்ற தலைவர், ஒன்றியக்குழு தலைவர் மூலமாக தெரிவித்து உள்ளாட்சிகளில் உள்ள பணிகளை தீர்த்து கொண்டிருக்கின்றோம்.

மேலும், இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் வேளையம்பாக்கம் ஊராட்சியில் ரூ. 55 இலட்சம் மதிப்பில் தனிநபர் பணிகளும், ரூ. 39 இலட்சம் மதிப்பில் நீர்நிலைகள் பராமரிப்பு பணிகளும், ரூ. 25 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்பில் சாலைபணிகளும், ரூ. 23 இலட்சத்து 26 ஆயிரம் மதிப்பீட்டில் பள்ளி உட்கட்டமைப்பு பணிகளும், ரூ. 23 இலட்சம் மதிப்பீட்டில் பக்ககால்வாய் பணிகளும், ரூ. 17 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் பண்ணைக் குட்டைகள் வெட்டுவதற்கும், ரூ. 8 இலட்சத்து 26 ஆயிரம் மதிப்பீட்டில் சுகாதார பணிகளும், ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் பணிகளும் என மொத்தம் 90 பணிகளில் ரூ. 2 கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டில் இந்த ஊராட்சியில் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செய்யப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினராக பொறுப்பேற்றவுடன் இந்த கிராமத்தில் உள்ள நடைபாதை கிணறுக்கு பாதுகாப்பு சுவர் அமைக்க கோரி மனு அளித்ததை தொடர்ந்து, அவர்களின் கோரிக்கை நிறைவேற்ற பட்டது. அது மட்டுமில்லாமல் ஆதி திராவிடர் குடியிருப்பு கட்டிமுடிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு வேளையம்பாக்கம் பகுதிக்கு பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. தேர்தல் காலங்களில் ஒரு தாய் அரவணைப்பது போல் அரவணைத்த ஒரு ஊர் வேளையம்பாக்கம் ஆகும். இப்பொழுதும் ரூ. 5.5 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நெடுஞ்சாலைத் துறை மூலம் பாலம் கட்டும் பணிகள் நடைபெறுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டு பொருளாதாரம் உயர வேண்டும் என்று மட்டுமில்லாமல் குடும்ப பொருளாதாரம் உயர வேண்டும் என எண்ணுகிறார். ஆகவே தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியில் பல திட்டங்களை நேரடியாக குடும்பங்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மகளிர்களுக்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டம், 12ம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி படிப்பதற்கு மாணவிகளுக்கு மாதந்தோறும் உதவிக்கட்டணம் வழங்குகின்ற புதுமைப் பெண் திட்டம், அதேப்போல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி படிப்பதற்கு மாணவர்களுக்கு உதவிகட்டணம் வழங்குகின்ற தமிழ்புதல்வன் திட்டம், பொங்கல் சீர் வரிசை போன்று தாய் வீட்டு சீதனமாக மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1000 வழங்குகின்ற கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் உள்ளிட்டவற்றை நமது குடும்ப பொருளாதாரம் உயர வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏறத்தாழ 3000 மேற்பட்ட வீடுகள் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கேட்டுக்கொள்கிறது என்றால் நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் ஓட்டு வீடுகள், ஆஸ்பெட்டால் வீடுகள், கூரை வீடுகள் இருக்க கூடாது. மொத் தப் பட் டி ய லும் பெற்று மாவட்டம் முழுவதும் கட்டுமான வீடுகளாக கட்ட வேண்டும். அதேப்போல் வேளையம்பாக்கம் பகுதியில் உள்ள மக்களும் ஊராட்சி மன்ற தலைவர் அல்லது ஒன்றியக்குழு தலைவர் மூலமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடத்தில் பரிசீலனை செய்து வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கோரிக்கை மனுக்களாக ஒன்று அரை கி.மீ மயான சாலை தார் சாலை அமைத்து தர வேண்டும் என்றும், ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே நடைபெறும் பணியிடத்தில் 2 கல்வெட்டுகள் கட்டி தரவேண்டுமென்று அளித்த கோரிக்கையின் அடிப்படையில் அதற்கு இப்பொழுதே ஆணையிடப்பட்டு நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்கள்.

கிராம மக்கள் அளித்த கோரிக்கை மனுக்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற் கொள் ளப் ப டும். வேளையம்பாக்கம் பகுதியில் சிமெண்ட் சாலைகள் அமைக்கவும், சமுதாய கூடம் அமைக்கவும், 4 ஊர்களுக்கு சேர்த்து மையப்பகுதியாக பழையனூரில் கல்யாண மண்டபம் விரைவில் பயன்பாட்டிற்கு கட்டப்படும். எனவே நமது குடும்ப பொருளாதாரம் மேலும் வளர்வதற்காக நம்முடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்வதற்காக 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் எப்பொழுதும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இன்று நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பாக உட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு உட்டச்சத்து பெட்டகமும், 3 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளையும், 4 பயனாளிகளுக்கு நத்தம் பட்டா மாறுதல் 3 ஆணைகளையும், 3 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளையும், 2 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 3 நபர்களுக்கு தனிநபர் மண் வரப்பு அமைத்தலுக்கான ஆணைகளை வழங்கியும், சிறப்பாக செயல்படும் ஸ்ரீ தேவி மகளிர் சுய உதவிக் குழுவினை சிறப்பித்தும், 3 தூய்மைபணியாளர்களை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கௌரவித்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், கோட்டாட்சியர் ஆர்.மந்தாகினி, மாவட்ட சமூக நல அலுவலர் சே. சரண்யா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சையத் பயாஸ் அகமத், திருவண்ணாமலை ஒன்றியக் குழு தலைவர் கலைவாணி கலைமணி, திருவண்ணாமலை ஒன்றியக்குழ துணைத் தலைவர் த.ரமணன், ஆணையாளர் பரமேஸ்வரன் திருவண்ணாமலை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மெ.பிரித்திவிராஜன், மற்றும் அனைத்துதுறை அரசு அலுவலர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். முடிவில் வேளையம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அமிர்தம் பாண்டுரங்கன் நன்றி கூறினார்.

## வேப்பூர் ஊராட்சி கிராம சபா கூட்டம்



**ராணிப்பேட்டை, நவ, 24-** ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த வேப்பூர் ஊராட்சியில் உள்ளாட்சி தின சிறப்பு கிராமசபா கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் ராமலிங்கம் தலைமை வகித்தார். துணை தலைவர் ரஞ்சித்குமார் முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலாளர் ம.சரவணன் வரவேற்றார். ஆற்காடு வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன், பொறியாளர் துரை பாபு, ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர். கூட்டத்தில் வேப்பூர் ஊராட்சியில் பணி செய்யும் தூய்மை பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்..இதில் கலைஞர் கனவு இல்ல திட்டம் மற்றும் பிரதமரின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளை கணக்கெடுத்து தேர்வு செய்வது, உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கிராம சபா கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## காவனூர்,சில்வர்பேட்டையில் உள்ளாட்சி தின கிராமசபை கூட்டம்



**அரக்கோணம் நவ.24** ராணிப்பேட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வழிகாட்டுதலின் பேரில் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் காவனூர் மதுரா சில்வர் பேட்டை கிராம சமுதாய கூடம் அருகில் உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு கிராமசபை கூட்டம் நடைபெற்றது

இந்த க்கூட்டம் ஊராட்சி மன்றத் தலைவர் தனலட்சுமி சந்திரன் தலைமையில் ஒன்றிய குழு உறுப்பினர் வழக்கறிஞர் சரண்யா சரவணன், துணை தலைவர் அன்னலட்சுமி தேவேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சிறப்பு அதிகாரியாக துணை பீடிஓ புஷ்பராஜ் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கோமதி ஜெயவேல், வழக்கறிஞர். யோகராஜ், சுமதி ஜெயதேவன், ரமேஷ், வினோத்காம்ளி, உஷாதேவா, கலைச்செல்வி தீனன், பிரமோதினி ஸ்டாலின் உட்பட திரளான பொது மக்கள் மக்கள் பணியாளர் தேவமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தூய்மை பணியாளர்கள் 10 பேர் கவுரவபடுத்தபட்டனர் இதுபோல் பழைய பள்ளி கட்டிடங்கள் சீரமைத்து கொடுத்ததற்க ஆசிரியர்கள் குழு ஊராட்சி மன்றத்திற்கு நன்றி தெரிவித்தனர் தென்னை மற்றும் பழவகை செடிகள் மான்ய விலையில் தருவதாக வேளாண்மை துறையினர் அறிவித்தனர் புதிய வீடு கட்டுபவர்கள் இனி இணையதளம் வழியாக அனுமதி கோரி விண்ணபிக்கலாம் எனவும் பருவம மைகாலம் என்பதால் தண்ணீரை காய்ச்சி குடிக்குமாறும் மன்ற கூட்டத்தில் அறிவுத்தபட்டனர் இறுதியில் ஊராட்சி செயலர் அரிகிருஷ்ணன் நன்றி கூறினார்


## முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் 21ம் ஆண்டு நினைவு தினம்: செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மலர் தூவி மரியாதை

**செஞ்சி நவ-24.** விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சரும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் மன சாட்சியாக விளங்கிய முரசொலிமாறன் அவர்களின் 21 ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல் மணி,நகர பொருளாளர் நெடுஞ்செழியன்,பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள் சங்கர், நூர்ஜகான் ஜாபர், ,மாவட்ட ஆதிதிராவிட நல அணி துணை அமைப்பாளர் சேகர்,வார்டு செயலாளர்கள்ஜி. டி. தனசேகரன், கோகுல்,குணசேகரன், வினோத், பன்னீர், திரு, தொண்டரணி பாஷா, சம்பத், தண்டபாணி உள்ளிட்டதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின்திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## கோடம்பாக்கம் ஊராட்சியில் கிராம சபைக்கூட்டம்



**அரக்கோணம் நவ.24** நெமிலி ஊராட்சி ஒன்றியம் கோடம்பாக்கம் ஊராட்சியில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் வளர்மதி சுப்பிரமணி தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட திட்ட குழு உறுப்பினர் சுந்தரம்மாள் பெருமாள் கலந்துக் கொண்டு தூய்மை பணியாளர்கள் பாராட்டி சால்வை அணிவித்து மரியாதை செய்தார் தொடர்ந்து வருகிற பருவமழை எவ்வாறு எதிர் கொள்வது மற்றும் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் குறித்து பொதுமக்களுடன் பேசபட்டது.

இந்நிகழ்வில் நெமிலி மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஜி.சி.பெருமாள் உதவி ஆய்வாளர் தமிழரசன் தோட்டகலை துறை அன்பு துணை தலைவர் கோபிநாத் ஆகியோர் கலந்து கொண்டனர் ஊராட்சி செயலாளர் நன்றி கூறினார்

**காணவில்லை**

அரக்கோணம் வட்டம் மேல்பாக்கம் பரித்தபுத்தூர் நெ 504 பி ஆர் கண்டிகை முகவரியில் வசிக்கும் ராமகிருஷ்ணா பிள்ளை மகன் நரசிங்க பெருமாள் எனது தந்தை பெயரில் உள்ள அசல் ஆவணம்-4112/1953 இதனை நகலெடுக்க 08-07-2024ல் நாகவேடு வந்த போது காணவில்லை இது தொடர்பாக ஆன்லைன் LDR No 939202 400 421 எண்ணில் புகார் செய்துள்ளேன் யாரிடமாவது ஆவணம் கிடைத்தால் தரவும்.
இப்படிக்கு
நரசிங்க பெருமாள்

# வலையபட்டி கிராமத்தில் கிராமசபைக்கூட்டம்: விருதுநகர் கலெக்டர் தலைமையில் நடந்தது




**விருதுநகர், நவ. 24-**
விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், வலையபட்டி கிராமத்தில், உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு, கிராம சபைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன், தலைமையில் நடைபெற்றது.

இக்கிராமசபை கூட்டத்தில் கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பித்தல் குறித்தும், கிராம ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களை கௌரவித்தல் குறித்தும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல் குறித்தும், தூய்மை பாரத இயக்க(ஊரகம்) திட்டம் குறித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், குறித்தும், ஜல் ஜீவன் இயக்கம் குறித்தும், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம் குறித்தும், கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு குறித்தும், கூட்டாண்மை வாழ்வாதாரம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

இந்த கிராம சபையில் எடுக்கக்கூடிய தீர்மானங்கள், விவாதிக்கக் கூடிய விவாத பொருட்களை, பொதுமக்கள் பங்களிப்போடு விவாதம் செய்து, அதில் முடிவுகள் எடுக்கவும், புதிய திட்டங்களுக்கான முன்மொழிவுகளை கருத்துக்களை தெரிவிக்கவும் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன். தெரிவித்தார்.

முன்னதாக, தூய்மை பணியாளர்கள் மற்றும் சிறப்பாக பணியாற்றிய ஊராட்சி பணியாளர்களை கலெக்டர் சால்வை அணிவித்து கௌரவித்தார். இக்கூட்டத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளை கலெக்டர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மா வட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், திட்ட இயக்குநர் தண்டபாணி, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஹிமான்சு மங்கள் உதவி இயக்குநர அரவிந்த் உட்பட பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி மன்ற தலைவர், கிராம பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# தூய்மை காவலர்களுக்கு ஆடைகள் வழங்கல்



**ஒட்டன்சத்திரம், நவ. 24-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம்ஒன்றியம் விருப்பாட்சி ஊராட்சியில் உள்ளாட்சி தினகிராமசபை கூட்டத்தில் தூய்மை காவலர்களுக்கு உடைகள் வழங்கி கொளரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் காமராஜ்.ஊராட்சி மன்ற தலைவர் மாலதி வெண்ணிலா, ஊராட்சி செயலாளர் பிச்சைமணி உள்ளிட்ட வார்டு உறுப்பினர்கள், பொது மக்கள்கலந்துகொண்டனர்

# நத்தம் அருகே சாலையோரத்தில் செடி, கொடி அகற்றும் பணியில் ஈடுபட்ட வெளிநாட்டினர்



**நத்தம், நவ. 24-**
மதுரை மாவட்டம் சத்திரப்பட்டி அருகே கடவூர் பகுதியில் தொண்டு நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு வெளிநாட்டவர்கள் வருடத்திற்கு ஒரு முறை இங்கு வந்து தங்கி சுற்றியுள்ள கிராம பகுதிகளில் பல்வேறு சமூக சேவையிலும், துப்புரவு பணிகளிலும் ஈடுபடுவார்கள். இந்நிலையில் நேற்று காலை திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே வேம்பரளி பகுதியில் பிரிட்டன், ஸ்வீடன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த வெளிநாட்டினர் 21 பேர் துப்புரவு பணிகளிலும், செடிகளை அகற்றும் பணியிலும் ஈடுபட்டனர். மேலும் வேம்பரளி கிராமத்திற்கு செல்லும் சாலையின் இருபுறமும் இருந்த செடி கொடிகளை அகற்றிய வெளிநாட்டினர் கழிவு நீர் வாய்க்கால் சுத்தப்படுத்தும் பணியிலும் ஈடுபட்டனர். தொடர்ந்து 30 நாட்கள் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் பல்வேறு பணிகளில் ஈடுபட போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து கிராம சபை கூட்டத்தில் தீர்மானம்

## அமைச்சர் மூர்த்தி, பெரியபுள்ளான் எம்.எல்.ஏ பங்கேற்பு



**மேலூர், நவ. 24-**
மேலூர் அருகே அரிட்டாப்பட்டி உள்ளிட்ட கிராம பகுதியில் டங்ஸ்டன் கனிம சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கிராம சபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரிட்டாபட்டி , மீனாட்சிபுரம், கூலானிப்பட்டி, செட்டியார்பட்டி, அ. வல்லாளப்பட்டி, சண்முகநாதபுரம், நடுவளவு, தெற்குவளவு, எட்டிமங்கலம், கிடாரிப்பட்டி ஆகிய கிராமங்களில் 5000 ஏக்கர் பரப்பளவில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரிட்டாபட்டி ரோட்டில் அமைந்துள்ள சின்னையன் கோவிலில் நேற்று காலை 11 மணியளவில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் வீரம்மாள் தலைமையில் நடைபெற்றது.

இந்த கிராம சபை கூட்டத்திற்கு அமைச்சர் பி. மூர்த்தி, மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மேலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தரசாமி, மேலூர் யூனியன் சேர்மன் பொன்னுச்சாமி, அ.வள்ளாளப்பட்டி பேரூராட்சி சேர்மன் குமரன், வைஸ் சேர்மன் பாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ராஜராஜன், ராஜேந்திர பிரபு, கிடாரிபட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஹேமலதா மதிவாணன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் நாவினிபட்டி வேலாயுதம், அ.வள்ளாளபட்டி பேரூர் கழக செயலாளர் கார்த்திகேயன், முன்னாள் யூனியன் சேர்மன் செல்வராஜ், முன்னாள் வல்லாள்பட்டி சேர்மன் ரகுபதி, நகராட்சி துணைத் தலைவர் இளஞ்செழியன், குமரேசன், துரை புகழேந்தி மற்றும் சமூக ஆர்வலர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கிராமசபை கூட்டத்தில் அமைச்சர் மூர்த்தி பேசியதாவது,

அரிட்டாபட்டி, அழகர் கோவில் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் மத்திய அரசு துணையுடன் டங்ஸ்டன் கனிம சுரங்கம் இந்த பகுதியில் ஒருபோதும் ஆய்வுக்கு அனுமதிக்கப்பட மாட்டாது. டங்ஸ்டன் கனிமம் எடுப்பதற்கு தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

இந்த பகுதி ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட பல்லுயிர் தளமாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது குறித்து பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என்று தெரிவித்தார்.

மேலூர் எம்.எல்.ஏ பெரியபுள்ளான் பேசுகையில், அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைப்பதற்கு கிராமசபை கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றபட வேண்டுமென்று கூறினார். அரிட்டாபட்டி மற்றும் அழகர் கோயில் சுற்றுலாத்தலமாக இருந்த போதிலும் மத்திய, மாநில, அரசு அனுமதி அளித்திருப்பதாக நாளிதழில் செய்தி வந்ததன் அடிப்படையில் இதுகுறித்து சட்டமன்றத்தில் அதிமுக பொதுச்செயலாளரும், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அதிமுக சார்பில் சட்டசபையில் கவன ஈர்ப்பு தீர்மானம் நிறைவேற்ற உறுதி செய்வேன் என்று எம்.எல்.ஏ பெரியபுள்ளான் பேசினார்.

# கருத்தனேந்தல் கிராமத்தில் வரும் முன் காப்போம் மருத்துவ முகாம்

## முருகேசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்



**பரமக்குடி, நவ. 24-**
இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட போகலூர் ஒன்றியத்தில் உள்ள கருத்தனேந்தல் கிராமத்தில் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் நடைபெற்றது. பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கருத்தனேந்தல் கிராமத்தில் நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாமினை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் வட்டார மருத்துவ அலுவலர் கார்த்திக்,போகலூர் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் சத்யாகுணசேகரன், ஒன்றிய குழு துணைத் தலைவர் வழக்கறிஞர் பூமிநாதன், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர். முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# முதுகுளத்தூர் அருகே வருமுன் காப்போம் மருத்துவ முகாம்



**முதுகுளத்தூர், நவ. 24-**
முதுகுளத்தூர் அருகே உள்ள மீசல் கிராமத்தில் நடைபெற்ற தமிழக அரசின் கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாமில் 858 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. திருவரங்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சார்பில் மீசல், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற மருத்துவ முகாமிற்கு கீழத்தூவல் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்.நெப்போலியன் தலைமை தாங்கினர் மருத்துவ அலுவலர் சக்தி சரண்யா முன்னிலை வகித்தனர், சுகாதார ஆய்வாளர், முனியசாமி வரவேற்றார்,

முகாமை பிரபக்களூர் ஊராட்சி மன்றத் தலைவர் தீபா நீதிராஜன் குத்துவிளக்கு ஏற்றி வைத்து துவக்கி வைத்தனர், இம் முகாமில் 5 கர்ப்பிணி தாய் மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும், மக்களை தேடி மருத்துவத் திட்டத்தில் 5 நபர்களுக்கு மருந்து பெட்டகமும் வழங்கப்பட்டது, இம் முகாமில் 858 நபர்களுக்கு சிகிச்சை அளித்து மருந்துகள் வழங்கப்பட்டது. மேலும் மருத்துவ ஆய்வகத்தில் ரத்தம் சிறுநீர் பரிசோதனைகளும், 28, நபர்களுக்கு இசிஜி பரிசோதனையும், செய்யப்பட்டது, இம் முகாமில் 5நபர்கள் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்

இம் முகாமில் விக்னேஷ், ராஜேஷ்,சித்த மருத்துவர் தனலெட்சுமி, உள்ளிட்ட மருத்துவ அலுவலர்களும், மருத்துவ மல்லா மேற்பார்வையாளர் கதிரேசன்,புள்ளியியல் உதவியாளர் செந்தில்குமார், சுகாதார ஆய்வாளர்கள் மனோகரன், பழனிச்சாமி, பூமி,சக்திமோகன், உள்ளிட்ட சுகாதார ஆய்வாளர்களும், ஏராளமான மருத்துவ, கிராம செவிலியர்கள், மருந்தாளுனர்கள் ஆய்வக நுட்பனர்கள் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்கள் பங்கேற்றனர். வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சுப்பிரமணியன் நன்றியுரை கூறினர்.

# திருமங்கலத்தில் நடைபெற்ற வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாம்களை மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பார்வையிட்டார்



**திருமங்கலம், நவ. 24-**
மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் நடைபெற்ற வாக்காளர் சேர்க்கை சிறப்பு முகாம்களை மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் நேரில் பார்வையிட்டார்.

தி மு க தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது ஆணைக்கிணங்க, மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், இடமாற்றம் மற்றும் இதர பணிகளை மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், திருமங்கலம் சட்டமன்ற தொகுதி தலைமை கழக பார்வையாளர் டிஸ்கோ எம்.அலாவுதீன் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

அப்போது கழகத்திற்காக சிறப்பான இப்பணியில் பணியாற்றி வரும் வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள்,நிர்வாகிகள், பாகமுகவர்கள் (பிஎல் ஏ -2) மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவருக்கும் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வாழ்த்து தெரிவித்தார். அப்போது திருமங்கலம் நகர செயலாளர் ஸ்ரீதர்,நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத் தலைவர் ஆதவன் அதியமான், ஒன்றிய செயலாளர் மதன்குமார், ராமமூர்த்தி,பாண்டியன், மெப்கோ தொழிற்சங்க தலைவர் முத்துக்குமார், நகர் மன்ற உறுப்பினர்கள் சின்னச்சாமி, திருக்குமார், வீரக்குமார்,சரண்யா ரவி, சங்கீதா, முத்து காமாட்சி விஜயன்,பெல்ட் முருகன் கட்சி நிர்வாகிகள் ரவி, செல்வம், சிவனேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்ட மன்ற தொகுதி வேடசந்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் சேர்க்கை முகாம் நடைபெறுவதை அ.தி.மு.க. இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாநில செயலாளர் டாக்டர் வி.பி.பி. பரமசிவம் நேரில் ஆய்வு செய்தார். உடன் வேடசந்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜான் போஸ், பேரூர் செயலாளர் பாபு சேட் மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# போடிக்காமன்வாடி ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்



**வத்தலக்குண்டு, நவ. 24-**
திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் போடிக் காமன்வாடி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் நாகலட்சுமி சசிகுமார் தலைமை வகித்தார். பற்றாளர் முத்து. ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஊராட்சியில் சிறப்பாக பணியாற்றும் ஊழியர்கள் , மற்றும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு பாராட்டும், வடகிழக்கு பருவமழை உன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவும் தூய்மை பாரத இயக்கத் திட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஜல்ஜீவன் இயக்கம் கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஊராட்சி செயலர் பொறுப்பு திருப்பதி அனைவரையும் வரவேற்று அனைத்து தீர்மானங்களையும் முன்மொழிந்தார். கூட்டத்தில் அனைத்து வார்டு உறுப்பினர்கள் மகளிர் சுய உதவி குழுவினர்கள் கால்நடை மருத்துவர்கள் காவல் துறையினர் மற்றும் அனைத்து அரசுத்துறை அதிகாரிகள் திரளாக கலந்து கொண்டார்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் ஊராட்சி மன்ற தலைவர் நாகலட்சுமி சசிகுமார் நன்றி கூறினார்.

# நத்தம் பகுதியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டங்கள்

**நத்தம், நவ. 24-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே வேலம்பட்டி ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராமசபை கூட்டம் நடந்தது. இதற்கு ஊராட்சிதலைவர் கண்ணன் தலைமை தாங்கினார்.இதில் தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர்களை கௌரவபடுத்துவது, வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதே போலவே பண்ணுவார்பட்டி ஊராட்சியில் தலைவர் ஆண்டிச்சாமி தலைமையில் கிராமசபை கூட்டம் நடந்தது. இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் மகுடபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். புன்னப்பட்டி ஊராட்சியில் தலைவர் ஜெயப்பிரகாஷ், குடகிப்பட்டியில் தலைவர் ராஜேஸ்வரி அழகர்சாமி, வத்திபட்டியில் தலைவர் சாத்திபவுர், லிங்கவாடியில் தலைவர் அழகிநேரு, ஊராளிபட்டி ஊராட்சியில் தலைவர் தேனம்மாள் தேன்சேகர், செந்துறை ஊராட்சியில் தலைவர் சவரிமுத்து,பரளிபுதூரில் தலைவர் வெள்ளைத்தாய் தங்கராஜ், புதுப்பட்டி ஊராட்சியில் தலைவர் பழனியம்மாள் மகாலிங்கம், சமுத்திராபட்டி ஊராட்சியில் தலைவர் அமராவதி சேது, ஆவிச்சிபட்டி ஊராட்சியில் தலைவர் துர்க்க சங்கீதா பிரசாத், சிறுகுடி ஊராட்சியில் தலைவர் கோகிலாவாணி வீரராகவன், சாத்தம்பாடி ஊராட்சியில் பரமேஸ்வரி முருகன் ஆகியோர் தலைமையில் கிராமசபை கூட்டங்கள் நடந்தது.

இதில் அந்தந்த பகுதி ஊராட்சி செயலர்கள் ,கிராம பொது மக்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நரி ஊத்து ஊராட்சியில் கிராம சபை கூட்டம்



**வத்தலக்குண்டு,நவ. 24-**
திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் நரி ஊத்து ஊராட்சியில் உள்ள பாலம் பட்டி கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் செல்வம் தலைமை வகித்தார். பற்றாளர் பாலமுருகன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தனலட்சுமி ஆகியோர் முன்னிலை வைத்தார்.

ஊராட்சி செயலர் தவமணி அனைவரையும் வரவேற்று தீர்மானங்களை வாசித்தார்.

பொதுமக்கள் சார்பில் கொடுக்கப்பட்ட 11 தீர்மானங்கள் ஒருமனாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பாலுசாமி கஸ்தூரி லில்லி சுகன்யா மேரி ஜான் போஸ்கோ ராஜேந்திரன் கலைச்செல்வி மகாலட்சுமி மற்றும் ஊராட்சி மன்ற அனைத்து பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டார்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் ஊராட்சி மன்ற தலைவர் செல்வம் நன்றி கூறினார்.

## பெர்த் முதல் டெஸ்ட் போட்டியில்

# ஜெய்ஸ்வால், ராகுல் அபாரம்; வலுவான நிலையில் இந்தியா

**பெர்த், நவ. 24-**

பெர்த் முதல் டெஸ்ட் போட்டி 2-வது இன்னிங்சில் ஜெய்ஸ்வால், ராகுலின் அபார பேட்டிங்கால் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 218 ரன்கள் முன்னிலை பெற்று இந்திய அணி வலுவான நிலையில் உள்ளது.



**150 ரன்களில்...**

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை (2024-25) தொடரின் முதல் போட்டி பெர்த் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் டாஸ் வென்று முதல் இன்னிங்சில் விளையாடிய இந்திய அணி 150 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 41 ரன்கள் அடித்தார். ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹேசில்வுட் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 104 ரன்களில் சுருண்டது. அதிகபட்சமாக ஸ்டார்க் 26 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய பும்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

**ஜெய்ஸ்வால் - ராகுல்....**

இதனையடுத்து 46 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கேஎல் ராகுல் - ஜெய்ஸ்வால் களமிறங்கினர். முதல் இன்னிங்சில் போல் அல்லாமல் இந்த முறை ஆஸ்திரேலிய பந்து வீச்சை கவனமாக எதிர் கொண்ட இவர்கள் அணிக்கு வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். சிறப்பாக விளையாடிய இந்த ஜோடியில் ஜெய்ஸ்வால் முதலில் அரை சதம் அடித்தார். இதனை தொடர்ந்து மறுபுறம் நிலைத்து ஆடிய கேஎல் ராகுல் அரைசதம் அடித்து அசத்தினார்.

**218 ரன்கள் முன்னிலை...**

அரைசதமடித்த பிறகு ஜெய்ஸ்வால் அதிரடியாக விளையாடினார். பந்துகளை பவுண்டரிக்கும், சிக்சருக்கும் பறக்க விட்டார் மறுபுறம் கேஎல் ராகுல் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 170 ரன்கள் எடுத்திருந்த போது 2வது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஜெய்ஸ்வால் 90 ரன்களும், கேஎல் ராகுல் 62 ரன்களும் எடுத்து களத்தில் உள்ளனர். இந்திய அணி 218 ரன்கள் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது. இன்று 3வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

## 38 வருடங்களுக்குப்பிறகு....

# ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய ஜோடி சாதனை

**பெர்த், நவ. 24-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் 2-வது இன்னிங்சில் கேஎல் ராகுல் - ஜெய்ஸ்வால் இருவரும் அரைசதம் அடித்தனர். இதன் மூலம் ஆஸ்திரேலிய மண்ணில் 38 வருடங்களுக்கு பிறகு இந்திய ஜோடி சாதனை படைத்துள்ளது.

**இருவரும் அரைசதம்...**

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. வேகத்துக்கு சாதகமான இந்த மைதானத்தில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 150 ரன்களும், ஆஸ்திரேலியா 104 ரன்களும் அடித்தன. இதனையடுத்து 46 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களாக கேஎல் ராகுல் - ஜெய்ஸ்வால் களமிறங்கினர். ஆஸ்திரேலிய பந்துவீச்சை மிகுந்த கவனத்துடன் எதிர்கொண்ட இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர்.

**4-வது இந்திய ஜோடி...**

ஆஸ்திரேலிய மண்ணில் 38 ஆண்டுகளுக்குப்பின் ஒரு டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் இரு தொடக்க ஆட்டக்காரர்களும் அரைசதம் அடிப்பது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்னர் 1986-ம் ஆண்டு சுனில் கவாஸ்கர் மற்றும் ஸ்ரீகாந்த் இந்த சாதனையை படைத்துள்ளனர். தற்போது கேஎல் ராகுல் மற்றும் ஜெய்ஸ்வால் படைத்துள்ளனர். ஒட்டுமொத்தத்தில் இந்த சாதனையை படைத்த 4-வது இந்திய ஜோடி என்ற சாதனையையும் படைத்துள்ளனர். தற்போது வரை இந்திய அணி 2-வது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 169 ரன்கள் அடித்துள்ளது.

## ஒரு வருடத்தில் அதிக சிக்சர்கள்:

# டெஸ்ட் போட்டிகளில் ஜெய்ஸ்வால் சாதனை

**பெர்த், நவ. 24-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஜெய்ஸ்வால் 2 சிக்சர்கள் அடித்தன் மூலம், டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஒரு வருடத்தில் அதிக சிக்சர் அடித்து புதிய உலக சாதனை படைத்தார்.



**104 ரன்களில்...**

பெர்த் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி முதல் நாள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 67 ரன்களுடன் தடுமாறியது. அலெக்ஸ் கேரி 19 ரன்களுடனும், ஸ்டார்க் 6 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். இதையடுத்து 2வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 51.2 ஓவர்களில் 104 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ஸ்டார்க் 26 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய பும்ரா 5 விக்கெட்டுகளும், ஹர்ஷித் ராணா 3 விக்கெட்டுகளும், முகமது சிராஜ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தி அசத்தினர்.

**90 ரன்களுடன்...**

இதனையடுத்து 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 2-ம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 172 ரன்கள் அடித்துள்ளது. தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன ஜெய்ஸ்வால் 90 ரன்களுடனும், கேஎல் ராகுல் 62 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா இதுவரை 218 ரன்கள் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது. முன்னதாக இந்த போட்டியின் முதல் இன்னிங்சில் டக் அவுட் ஆன ஜெய்ஸ்வால், 2-வது இன்னிங்சில் 2 சிக்சர்கள் 7 பவுண்டரிகள் உட்பட 90 ரன்களுடன் களத்தில் உள்ளனர்.

**ஒரு ஆண்டில்...**

மேலும் தற்போது அடித்துள்ள இந்த 2 சிக்சர்களையும் சேர்த்து நடப்பாண்டில் மட்டும் டெஸ்ட் போட்டிகளில் 34 சிக்சர்கள் அடித்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு ஆண்டில் அதிக சிக்சர்கள் அடித்த வீரர் என்ற மாபெரும் சாதனையை அவர் படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் நியூசிலாந்தை சேர்ந்த பிரண்டன் மெக்கல்லம் 33 சிக்சர்கள் அடித்ததே அதிகபட்சமாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள ஜெய்ஸ்வால் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

### ஓராண்டில் அதிக சிக்ஸர்கள்:

1. யஷஸ்வி ஜெய்ஸ்வால் - 34 (2024).
2. பிரண்டன் மெக்கல்லம் - 33 (2014).
3. பென் ஸ்டோக்ஸ் - 26 (2022).
4. ஆடம் கில்கிறிஸ்ட் - 22 (2005).
5. வீரேந்தர் சேவாக் - 11 (2008).

## வெளிநாடுகளில் அதிக விக்கெட்கள்:

# ஜஸ்ப்ரிட் பும்ரா புதிய சாதனை

**பெர்த், நவ. 24-**

வெளிநாட்டுகளில் அதிக விக்கெட்கள் கைப்பற்றி, சுமார் 78 சதவீதம் வெளிநாட்டு மண்ணில் விக்கெட்களை கைப்பற்றியவர் என்ற சாதனையை ஜஸ்ப்ரிட் பும்ரா படைத்துள்ளார்.

இந்தியா ஆஸி.க்கு இடையேயான முதல் டெஸ்ட் பெர்த்தில் நேற்று முன்தினம் (நவ.22) தொடங்கியது. முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 150க்கு ஆல் அவுட் ஆக, ஆஸி. 104 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. தற்போது, இந்திய அணி 2ஆம் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 172 ரன்கள் எடுத்து வலுவான நிலையில் 2ஆம் நாளை முடித்துள்ளது. இந்தப் போட்டியில் ஜஸ்ப்ரீத் பும்ரா முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார்.

இதன் மூலம் மொத்தம் 11 முறை 5 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். இந்தியாவின் வேகப் பந்துவீச்சாளர்களில் அதிகமுறை 5 விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் ஜாகீர் கானை சமன் செய்துள்ளார்.

**131 விக்கெட்டுகள்...**

சொந்த மண்ணில் 2 முறையும் வெளிநாடுகளில் 9 முறையும் 5 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். மொத்தமாக சொந்த மண்ணில் 12 போட்டிகளில் 43 விக்கெட்டுகளும் வெளிநாடுகளில் 131 விக்கெட்டுகளும் எடுத்து அசத்தியுள்ளார். பொதுவாக அனைவரும் சொந்த மண்ணில் சிறப்பாக பந்துவீசும்போது பும்ரா வெளிநாட்டில் அசத்தியுள்ளார்.

பும்ராவின் 73.58 சதவிகித விக்கெட்டுகள் வெளிநாட்டில் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் பட்டியலில் அதிகமுறை வெளிநாட்டில் 5 விக்கெட்டுகள் எடுத்தவர்களில் நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹாட்லீ (21) முதலிடத்தில் இருக்கிறார். மெக்ரத் (18), வாசிக் அக்ரம் (17) அடுத்தடுத்த வரிசையில் இருக்கிறார்கள்.

**கபில்தேவ் 5 முறை...**

இந்தியாவின் கபில்தேவ் வெளிநாட்டில் 12 முறை 5 விக்கெட்டுகளை எடுத்து அசத்தியுள்ளார். ஆனால், பும்ராவின் ஒட்டுமொத்த டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் 73 சதவிகித விக்கெட்டுகள் வெளிநாடுகளில் என்பது வியக்கதக்க சாதனையாகவே இருக்கிறது.

இந்தத் தொடரில் இன்னும் 4 போட்டிகள், ஒரு இன்னிங்ஸ் மீதமுள்ள நிலையில் பல சாதனைகளை பும்ரா முறியடிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று ஐ.பி.எல். மெகா ஏலம்

ஐபிஎல் மெகா ஏலத்தில் அதிக தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட வீரர் என்ற மிட்செல் ஸ்டார்க்கின் சாதனையை ரிஷப் பந்த் முறியடிப்பார் என இந்திய அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். ஐபிஎல் மெகா ஏலம் இன்று (நவம்பர் 24) மற்றும் நாளை (நவம்பர் 25) சௌதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெறவுள்ளது. மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஐபிஎல் மெகா ஏலம் இன்று தொடங்கவுள்ளது.

ஐபிஎல் மெகா ஏலத்தில் ரிஷப் பந்த், கே.எல்.ராகுல் மற்றும் ஸ்ரேயாஸ் ஐயர் போன்ற நட்சத்திர வீரர்களை ஏலத்தில் எடுக்க அணிகளுக்குள் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐபிஎல் மெகா ஏலம் சௌதி அரேபியாவின் ஜெட்டாவில் இன்று தொடங்கவுள்ள நிலையில், மெகா ஏலத்தில் அதிக தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட வீரர் என்ற மிட்செல் ஸ்டார்க்கின் சாதனையை ரிஷப் பந்த் முறியடிப்பார் என இந்திய அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

இது தொடர்பாக அவர் பேசியதாவது: ரிஷப் பந்த்தின் கீப்பிங் மற்றும் பேட்டிங் திறமைகளை தவிர்த்து, அவர் மிகவும் சிறப்பான பண்புகளைக் கொண்டவர். அவர் கேப்டனாக அணியை சிறப்பாக வழிநடத்தும் பண்புகளைக் கொண்டுள்ளார். அதனால், எந்த ஒரு அணி உரிமையாளரோ அல்லது பயிற்சியாளரோ அவரை இழக்க விரும்பமாட்டார்கள். ஐபிஎல் மெகா ஏலத்தில் ரூ.25 கோடிக்கும் அதிகமாக ரிஷப் பந்த் ஏலத்தில் எடுக்கப்படுவார் என நினைக்கிறேன் என்றார்.

## திலக் வர்மா சாதனை

17-வது சையத் முஷ்டாக் அலி டி20 கிரிக்கெட் தொடர் மும்பை, இந்தூர், ராஜ்கோட், ஐதராபாத் உள்பட பல்வேறு நகரங்களில் நேற்று (சனிக்கிழமை) தொடங்கி டிசம்பர் 15-ந் தேதி வரை நடக்கிறது. இதில் நடப்பு சாம்பியன் பஞ்சாப், 3 முறை சாம்பியனான தமிழ்நாடு, பெங்கால், பரோடா உள்பட 38 அணிகள் பங்கேற்கின்றன. அவை 5 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் நேற்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் திலக் வர்மா தலைமையிலான ஐதராபாத் அணி, மேகாலயாவை எதிர்கொண்டது. இதில் டாஸ் வென்ற மேகாலயா பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணி திலக் வர்மாவின் அதிரடி சதத்தின் மூலம் 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 248 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக திலக் வர்மா 151 ரன்கள் குவித்து அசத்தினார். பின்னர் இலக்கை நோக்கி களமிறங்கிய மேகாலயா 69 ரன்களில் ஆல் அவுட் ஆகி படுதோல்வியை சந்தித்தது. இந்த சதம் திலக் வர்மாவின் டி20 கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக அடித்த 3-வது சதமாகும். ஏற்கனவே கடந்த தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரில் (4 போட்டிகள்) இந்திய அணியில் இடம்பெற்றிருந்த அவர் கடைசி 2 போட்டிகளில் சதம் அடித்திருந்தார். இதன் மூலம் ஒட்டுமொத்த டி20 கிரிக்கெட் வரலாற்றில் (உள்ளூர் & சர்வதேசம்) தொடர்ச்சியாக 3 சதம் அடித்த முதல் வீரர் என்ற மாபெரும் சாதனையை திலக் வர்மா படைத்துள்ளார்.

## ஸ்டார்க்கை சீண்டிய ஜெய்ஸ்வால்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2-வது இன்னிங்சில் சிறப்பாக விளையாடிய ஜெய்ஸ்வால், கேஎல் ராகுல் அரை சதம் அடித்தனர். இந்திய அணி விக்கெட் இழப்பின்றி ரன்கள் எடுத்திருந்த போது 2வது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது ஜெய்ஸ்வால் 90 ரன்களும், கேஎல் ராகுல் 62 ரன்களும் எடுத்து களத்தில் உள்ளனர். இந்திய அணி 218 ரன்கள் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

இந்த நிலையில், இந்த போட்டியின்போது ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஸ்டார்க்கை ஜெய்ஸ்வால் சீண்டினார். ஸ்டார்க் பந்துவீசிய பிறகு அவரை பார்த்து 'உங்களது பந்து மிக மெதுவாகவருகிறது' என ஜெய்ஸ்வால் நக்கலாக தெரிவித்தார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் அதிகளவில் வைரலாகி வருகிறது.

## மீண்டும் கோபமடைந்த காம்பீர்

முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 150க்கு ஆல் அவுட்டானது. இதனைத் தொடர்ந்து முதல் நாள் முடிவில் ஆஸி. அணி 67/7 ரன்கள் மட்டுமே எடுத்தது. தற்போது, உணவு இடைவேளை வரை விளையாடிய ஆஸி. 104 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இந்தப் போட்டியில் மிட்செல் ஸ்டார்க் 100க்கு அதிகமான பந்துகள் விளையாடினார். 67/7 என்றிருந்த ரன்னிலிருந்து 104க்கு கொண்டு சென்றார்.

பும்ரா பந்துவீசிக்கொண்டிருந்தபோது காமிராவில் காட்டப்பட்ட இந்தியாவின் பயிற்சியாளர் கௌதம் காம்பீர் கோபமாக தனது தொப்பியை தூக்கி வீசினார். ஏற்கனவே, நியூசிலாந்திடம் வரலாற்று தோல்வியை சந்தித்தபோது திமிராக பேசியது சர்ச்சையானது.

முன்னாள் வீரர்கள் பலரும் கம்பீரை அமைதியாக இருக்கும்படிக் கூறியதும் குறிப்பிடத்தக்கது. வெற்றிப் பெற்றே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக தெரிகிறது. இந்தத் தொடரில் தோல்வியுற்றால் அவரது பயிற்சியாளர் பதவி பறிபோகுமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்காவின் அறிக்கை அடிப்படை ஆதாரமற்றது

## அதானி குழும தலைமை நிதி அதிகாரி கண்டனம்

**புதுடெல்லி, நவ. 24-**

அதானி குழுமத்தின் 11 பொது நிறுவனங்களில் எந்த நிறுவனமும் எந்த தவறும் செய்யவில்லை அல்லது குற்றம் சாட்டப்படவில்லை என அதானி குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி ஜுகேஷிந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அதானி குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

அமெரிக்காவில் சட்டப்பூர்வமாக தாக்கல் செய்ததில் அதானி நிறுவனமும் எந்த தவறும் செய்யவில்லை. கடந்த இரண்டு நாட்களில் அதானி குழும விவகாரங்கள் தொடர்பாக பல செய்திகளைப் பார்த்திருப்பீர்கள். இது குறிப்பாக அதானி கிரீனின் ஒட்டுமொத்த வணிகத்தில் சுமார் 10 சதவீதமான ஒப்பந்தத்துடன் தொடர்புடையது

அதானி குழுமம் 11 பொது நிறுவனங்களின் தொகுப்பை கொண்டுள்ளது, அவை எதுவும் குற்றப்பத்திரிகைக்கு உட்பட்டவை அல்ல. சட்டப்பூர்வ ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள விஷயத்தை விரிவாக மதிப்பாய்வு செய்தவுடன் நாங்கள் முழுமையாக பதிலளிப்போம்.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் குற்றச்சாட்டுகளின் குறிப்பிட்ட தன்மையை குழுமம் அறிந்தது. இந்த அறிக்கை வெளிவந்த பிறகு, அதானி குழுமம், இவை வெறும் குற்றச்சாட்டுகள் என்றும், அதை அப்படியே பார்க்க வேண்டும் என்றும் கூறியது. சட்டப்பூர்வ நடவடிக்கை குறித்து ஆராயவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அதானி குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி ஜுகேஷிந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

## நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி:

# மகாராஷ்டிரா மாநில மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி நன்றி

**மும்பை, நவ. 24-**

சட்டசபை தேர்தல் வெற்றிக்காக மகாராஷ்டிரா மாநில மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் மொத்தம் உள்ள 288 சட்டசபை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 20-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகின. இதன்படி மகாராஷ்டிரா மாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சியை தக்கவைத்துள்ளது. இந்த வெற்றியை பா.ஜ.க. தொண்டர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

இந்த நிலையில், சட்டசபை தேர்தல் வெற்றிக்காக மகாராஷ்டிரா மாநில மக்களுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "வளர்ச்சி வெற்றி பெற்றுள்ளது. நல்லாட்சி வெற்றி பெற்றுள்ளது. நாம் ஒற்றுமையுடன் இன்னும் பல உயரங்களை அடைவோம்.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை வழங்கியதற்காக மகாராஷ்டிரா மாநிலத்தின் சகோதர, சகோதரிகளுக்கும், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அன்பும், அரவணைப்பும் ஈடு இணையில்லாதது. மகாராஷ்டிரா மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக தேசிய ஜனநாயக கூட்டணி தொடர்ந்து உழைக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

# மல்லிகார்ஜூனா கார்கேவிடம் வாழ்த்து பெற்ற பிரியங்கா காந்தி

**புதுடெல்லி, நவ. 24-**

பிரியங்கா காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூனா கார்கேவை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

வயநாடு மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட ராகுல் காந்தி, தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி நியமிக்கப்பட்டார். இதன்படி காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி, பாஜக வேட்பாளராக நவ்யா அரிதாஸ், இடதுசாரி கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு வேட்பாளராக சத்யன் மெகோரி களமிறங்கினர்.

இந்த சூழலில் வயநாடு இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டது. இதில் வயநாடு மக்களவை தொகுதியில் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பிரியங்கா காந்தி வெற்றி பெற்றுள்ளார். போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே இந்த மகத்தான வெற்றியை பிரியங்கா காந்தி சாத்தியமாக்கி உள்ளார்.

இந்த நிலையில், பிரியங்கா காந்தி காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூனா கார்கேவை சந்தித்து வாழ்த்து பெற்றார். இது தொடர்பாக மல்லிகார்ஜூனா கார்கே வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் , வயநாடு மக்களுக்கு நன்றி. பிரியங்கா காந்தி நாடாளுமன்றத்தில் வயநாட்டு மக்களுக்காகான சக்திவாய்ந்த குரலாக இருப்பார். அவரது திறமையான தலைமை , உறுதிப்பாடு மற்றும் அவரது வலுவான அர்ப்பணிப்பு பொதுத் துறையை மேலும் வளப்படுத்தும். என தெரிவித்துள்ளார் .

## அவதூறு பரப்பும் வீடியோக்கள்:

# நீக்கக்கோரி யூடியூபர்களுக்கு ஏ.ஆர்.ரகுமான் நோட்டீஸ்

**சென்னை, நவ. 24-**

அவதூறு பரப்பும் வீடியோக்கள் தொடர்பாக சமூக வலைதளங்கள் மற்றும் யூடியூபர்களுக்கு ஏ.ஆர்.ரகுமான் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

ஆஸ்கார் விருது பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், கடந்த 1995-ம் ஆண்டு சாய்ரா பானுவை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2 மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். மூத்த மகள் கதீஜாவுக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. ஏ.ஆர்.ரகுமானின் மகன் அமீனும் தனது தந்தையை போல் இசைத்துறையில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த நிலையில், ஏ.ஆர்.ரகுமான்-சாய்ரா தம்பதியினர் 29 ஆண்டு கால திருமண வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், விவாகரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக சமீபத்தில் அறிவித்தனர். இந்த அறிவிப்பு ரகுமானின் ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் பேசுபொருளானது.

இந்த சூழலில், இவர்களது பிரிவு குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பும் வகையில் வீடியோக்கள் பரப்பபப்பட்டுள்ளதாகவும், அவற்றை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் கூறி ஏ.ஆர்.ரகுமான் சார்பில் அவரது வழக்கறிஞர் நர்மதா சம்பத், சம்பந்தப்பட்ட சமூக வலைதளங்களுக்கும், யூடியூபர்களுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அதில், சமூக ஊடகங்களில் அவதூறு பரப்பும் வகையில் உண்மைக்கு புறம்பான தகவல்களுடன் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள், சிலர் கற்பனையில் அளித்த பேட்டிகள் போன்ற அவதூறு வீடியோக்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும், இந்த அவதூறு கட்டுரைகள் மற்றும் வீடியோக்களை நீக்காவிட்டால் 2 ஆண்டுகள் வரை தண்டனை விதிக்க வழி செய்யும் சட்டப்பிரிவுகளின் கீழ் அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. யாருக்கும் ஆட்சியில் பங்கு கொடுத்தது கிடையாது

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி

**திண்டுக்கல், நவ. 24-**

தமிழகத்தில் திமுக ஆட்சிதான் நடக்கிறது. ஆட்சியில் நாங்கள் யாருக்கும் பங்கு கொடுத்தது கிடையாது" என அமைச்சர் ஐ.பெரியசாமி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் அருகே பிள்ளையார் நத்தத்தில் சனிக்கிழமை (நவ.23) நடந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில் பங்கேற்ற ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, செய்தியாளர்களிடம் கூறியது: "தமிழகத்தில் திமுக, அதிமுக ஆகியவை பெரிய கட்சிகளாக இருந்தாலும் கூட்டணி இல்லாமல், இந்த 2 கட்சிகளாலும் வெற்றி பெற முடியாது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தது குறித்து பதில் சொல்ல முடியாது.

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி நடைபெறவில்லை. திமுக ஆட்சிதான் நடக்கிறது. ஆட்சியில் நாங்கள் யாருக்கும் பங்கு கொடுத்தது கிடையாது. கூட்டணியில் பங்கு இருக்கும். இடம் கேட்பார்கள், அதனை கொடுப்போம். ஆட்சியில் பங்கு என்பது எப்போதும் கொடுத்தது இல்லை. போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிகமான அக்கறை எடுத்து வருகிறார். எவ்வளவு பெரிய அந்தஸ்தில் இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய முதல்வராக மு.க.ஸ்டாலின் இருக்கிறார்.

வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என பார்க்கமாட்டார். சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டுவதில் உறுதியாக இருப்பார். கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் குட்கா வழக்கில் இருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் போதைப் பொருள் வழக்குகளில் தொடர்புடையவர்கள் சொத்துகளை பறிமுதல் செய்து கடுமையான நடவடிக்கை எடுத்த ஒரே அரசு முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசுதான். தமிழக டிஜிபியை சந்திக்க முடியவில்லை என மார்க்சிஸ்ட் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

டிஜிபி மட்டுமன்றி அமைச்சர்கள், முதல்வரை கட்சிக்காரர்கள் மட்டுமின்றி தனி மனிதர்களும் எளிதாக சந்திக்கலாம். எதையும் மறைக்க கூடாது. சின்ன தவறு மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எதையும் கண்டும், காணாமல் இருக்கும் அரசு இல்லை. அரசு மீது சிறிய கரும்புள்ளி கூட விழுக் கூடாது என்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனமாக செயல்பட்டு வருகிறார்," என்று கூறினார்.

# மகாராஷ்டிராவில் முதல்வர் யார் என்பதில் பிரச்சினை ஏதும் இல்லை: தேவேந்திர பட்னாவிஸ் பேட்டி

**மும்பை, நவ. 24-**

மகாராஷ்டிராவில் முதல்வர் யார் என்பதில் பிரச்சினை இல்லை என்று பாஜகவின் தேவேந்திர பட்னாவிஸ் கூறியுள்ளார்.

மகாராஷ்டிரா சட்டசபை தேர்தலில் பாஜக கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சியை மீண்டும் தக்க வைத்து உள்ளது. பாஜக தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ள நிலையில், அடுத்த முதல்வர் என்ற கேள்வி எழுந்துள்ளது. இது குறித்து பாஜக மூத்த தலைவரும் துணை முதல்வர்யுமான தேவேந்திர பட்னாவிஸ் கூறியதாவது:

மகாராஷ்டிரா மக்கள் வரலாறு காணாத வெற்றியை அளித்து உள்ளனர். பிரதமர் மோடி பக்கம் மக்கள் உள்ளதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களும் ஒற்றுமையாக எங்களுக்கு ஓட்டுப் போட்டு உள்ளனர். மகாயுதி, முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல்வர் அஜித் பவார் மற்றும் ராம் தாஸ் அத்வாலேவுக்கு ஆகியோருக்கு கிடைத்த வெற்றி. ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி. யார் முதல்வர் என்பதில் பிரச்னை இல்லை. ஒரே நாளில் மூன்று கட்சிகளும் அமர்ந்து பேசி பதவி குறித்து முடிவு செய்யப்படும். இதனை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். இதில் எந்த பிரச்னையும் இல்லை" என்றார்.

மரம்
மனிதனின்
உரம்



● தி.மு.க. மகளிரணி சார்பில் நேற்று நடைபெற்ற 'கலைஞர் 100 வினாடி-வினா' போட்டியில் வெற்றி பெற்றவர்களுடன் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு, கனிமொழி எம்.பி. உள்ளிட்டோர் குழுப்புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.



● திருச்சி, நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று திருச்சிக்கு விமானம் மூலம் வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்களும், நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



● உடுமலைப்பேட்டையில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கோயம்புத்தூர் மண்டலத்தில் 9-வது பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையத்தை நேற்று, அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் த.கிருஸ்துராஜ் உடனிருந்தார்.



● சென்னை அசோக் நகரில் நேற்று, தமிழ்நாடு அரசின் சார்பில், உவமை கவிஞர் சுரதாவின் 104-வது பிறந்த நாளையொட்டி அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், எஸ்.எம்.நாசர் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். அருகில் எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர்.




● சென்னை எழும்பூர் தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலக கூட்டரங்கில் நேற்று, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வருகின்ற 30-ம் தேதி சென்னை வால்டாக்ஸ் ரோட்டில் நடைபெறவுள்ள அடிக்கல் நாட்டு விழா மற்றும் திறப்பு விழாவின் முன்றேப்பாடு பணிகள் குறித்து, அனைத்துத்துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

# 14 மாநிலங்களில் 48 சட்டசபை இடைத்தேர்தல் வெற்றி நிலவரம்

புதுடெல்லி, நவ. 24-

இந்தியா முழுவதும் 14 மாநிலங்களைச் சேர்ந்த 48 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. இதில் உத்தரப் பிரதேசத்தில் 9, ராஜஸ்தானில் 7, மேற்குவங்கத்தில் 6, அசாமில் 5, பிகார், பஞ்சாபில் தலா 4, கர்நாடகத்தில் 3, கேரளம், மத்திய பிரதேசம், சிக்கிமில் தலா 2 தொகுதிகள், குஜராத், உத்தரகண்ட், மேகாலயா, சத்தீஸ்கரில் தலா ஒரு சட்டப்பேரவைத் தொகுதி என மொத்தம் 48 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று காலை தொடங்கி நடைபெற்றது. இத்துடன் கேரளத்தின் வயநாடு மற்றும் மகாராஷ்டிரத்தின் நான்தெட் மக்களவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நடத்தப்பட்டு அதற்கான வாக்கு எண்ணிக்கையும் நேற்று நடைபெற்றது.

தொகுதி வாரியாக வெற்றி பெற்றவர்களின் நிலவரங்கள் வெளியானது:

### உத்தரப்பிரதேசம்:

உ.பி.யில் பாஜக கூட்டணி 7 தொகுதிகளிலும், காங்கிரஸ் கூட்டணி கட்சியான சமாஜ்வாதி கட்சி 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 1. மீராபூர் - மிதிலேஷ் பால் (ஆர்எல்டி) - வெற்றி, 2. குந்தர்க்கி - ராம்வீர் சிங் (பாஜக) - வெற்றி, 3. காசியாபாத் - சஞ்சீவ் சர்மா (பாஜக) - வெற்றி, 4. காயீர் - சுரேந்தர் திலேர் (பாஜக) - வெற்றி, 5. புல்பூர் - தீபக் படேல் (பாஜக) - வெற்றி, 6. கதேஹரி - தர்மராஜ் நிஷாத் (பாஜக) - வெற்றி, 7. மஜாவான் - சுச்சிஸ்மிதா மௌர்யா (பாஜக) - வெற்றி, 8. கர்ஹால் - தேஜ் பிரதாப் சிங் (சமாஜ்வாதி) - வெற்றி, 9. சிஷாமௌ - நசீம் சோலங்கி (சமாஜ்வாதி) - வெற்றி,

### ராஜஸ்தான்:

ராஜஸ்தானில் பாஜக 5 இடங்களிலும், காங்கிரஸ் கூட்டணி 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. 1. ஜுன்ஜுனு - ராஜேந்திர பேம்பூ (பாஜக) - வெற்றி, 2. ராம்கர் - சுகவந்த் சிங் (பாஜக) - வெற்றி, 3. தியொளி - ராஜேந்திர குர்சார் (பாஜக) - வெற்றி, 4. கின்சார் - ரேவந்த் ராம் தங்கா (பாஜக) - வெற்றி, 5. சாலும்பர் - சாந்தா அம்ரித் லால் மீனா (பாஜக) - வெற்றி, 6. தௌசா - தீன் தயாள் ( காங்கிரஸ்) - வெற்றி, 7. சோரசி - அனில் குமார் கதாரா (பிஏபி) - வெற்றி,

### மேற்கு வங்கம்:

மேற்கு வங்கத்தில் 6 தொகுதிகளிலும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றுள்ளது. 1. சீதாய் - சங்கீதா ராய் (திரிணாமுல் காங்.) - வெற்றி, 2. மாதரிஹாத் - ஜெய்பிரகாஷ் (திரிணாமுல் காங்.) - வெற்றி, 3. நைய்ஹாத்தி - சனத் டே (திரிணாமுல் காங்.) - வெற்றி, 4. ஹரோவா - ரபியுல் இஸ்லாம் (திரிணாமுல் காங்.) - வெற்றி, 5. மெதினிபூர் - சுஜோய் ஹஸ்ரா (திரிணாமுல் காங்.) - வெற்றி, 6. தல்தங்ரா - ஃபல்குனி சிங்கபாபு (திரிணாமுல் காங்.) - வெற்றி.

### அசாம்:

அசாமில் பாஜக 3 தொகுதிகளிலும், அசோம் கண பரிஷத் (ஏஜிபி) 1 தொகுதியிலும், ஐக்கிய மக்கள் கட்சி லிபரல் (யுபிபிஎல்) ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளன. 1. தோலாய் - நிஹார் ரஞ்சன் தாஸ் (பாஜக) - வெற்றி, 2. பேஹாலி - திகந்தா கதோவால் (பாஜக) - வெற்றி, 3. சமாகுரி - தீப்லு ரஞ்சன் சர்மா (பாஜக) - வெற்றி, 4. சித்லி - நிர்மல் குமார் பிரம்மா (யுபிபிஎல்) - வெற்றி, 5. போங்காய்கான் - திப்திமாயி சௌதரி (ஏஜிபி) - வெற்றி.

### பிகார்:

பிகாரில் 4 தொகுதிகளிலும் பாஜகவின் தேசிய ஜனநாயகக் கூட்டணியே வெற்றி பெற்றுள்ளது. 1. தராரி - விஷால் பிரசாந்த் (பாஜக) - வெற்றி, 2. ராம்கர் - அஷோக் குமார் சிங் (பாஜக) - வெற்றி, 3. இமாம்கஞ்ச் - தீபா குமாரி (ஹெச்ஏஎம் - எஸ்) - வெற்றி, 4. பெலகஞ்ச் - மனோர்மா தேவி (ஜேடி - யு) - வெற்றி,

### பஞ்சாப்:

பஞ்சாப்பில் ஆம் ஆத்மி 3 இடங்களிலும், காங்கிரஸ் 1 இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன. 1. தேரா பாபா நானக் - குர்தீப் சிங் ரந்த்வா (ஆம் ஆத்மி) - வெற்றி, 2. சப்பேவால் - இஷாங் குமார் (ஆம் ஆத்மி) - வெற்றி, 3. கித்தெர்பாஹா - ஹர்தீப் சிங் (ஆம் ஆத்மி) - வெற்றி, 4. பர்னாலா - குல்தீப் சிங் திலான் (காங்கிரஸ்) - வெற்றி.

### கர்நாடகம்:

கர்நாடகத்தில் 3 தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 1. சிக்கௌன் - பதான் யாசிராமெத் கான் (காங்கிரஸ்) - வெற்றி, 2. சந்தூர் - அன்னபூர்ணா (காங்கிரஸ்) - வெற்றி, 3. சன்னப்பட்னா - சி பி யோகேஷ்வரா (காங்கிரஸ்) - வெற்றி,

### கேரளம்:

கேரளத்தில் 2 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. 1. பாலக்காடு - ராகுல் மம்கூட்டத்தில் (காங்கிரஸ்) - வெற்றி, 2. செலக்கரா - யு ஆர் பிரதீப் (மா.கம்யூ) - வெற்றி.

### மத்தியப்பிரதேசம்:

1. விஜய்பூர் - முகேஷ் மல்ஹோத்ரா (காங்கிரஸ்) - வெற்றி, 2. புத்னி - ராம்கந்த் பார்கவா (பாஜக) - வெற்றி.

### சிக்கிம்:

சிக்கிமில் இரு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடத்தப்பட்டத் தேர்தல்களில் சிக்கிம் கிரந்த்கரி மோர்ச்சா கட்சி (எஸ்கேஎம்) வேட்பாளர்கள் இருவரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 1. சோரங் - ஆதித்யா கோலாய் (எஸ்கேஎம்) - வெற்றி, 2. நாம்ச்சி - சதீஷ் சந்திர ராய் (எஸ்கேஎம்) - வெற்றி.

### சத்தீஸ்கர்:

1. ராய்பூர் நகர் தெற்கு - சுனில் குமார் சோனி (பாஜக) - வெற்றி

### குஜராத்:

1. வாவ் - தாகோர் ஸ்வரூப்ஜி சர்தார்ஜி (பாஜக) - வெற்றி

### மேகாலயா:

மேகாலயாவில் பாஜகவின் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியான தேசிய மக்கள் கட்சி பேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். 1. காம்பெக்ரே - மேதாப் சந்தி அகிடோக் சங்மா (என்பிபி) - வெற்றி.

### உத்தரகாண்ட்:

1. கேதர்நாத் - ஆஷா நௌதியல் (பாஜக) - வெற்றி. மேலும், மக்களவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் கேரளத்தின் வயநாடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட பிரியங்கா காந்தி வெற்றி பெற்றுள்ளார். மகாராஷ்டிரத்தின் நான்தெட் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்ட சந்துக்ராவ் வெற்றி பெற்றுள்ளார்.

# 2 பேர் குடும்பத்திற்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

உறவினர் சிசுபாலன் ஆகியோர் 18-11-2024 அன்று யானையின் அருகில் இருந்தபோது யானை திடீரென திமிறி அருகில் இருந்த பாகன் உதயகுமார் மற்றும் சிசுபாலன் ஆகிய இருவரையும் தூக்கி வீசித் தாக்கியுள்ளது. இதில், சிசுபாலன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார் என்றும், பாகன் உதயகுமார் சிகிச்சை பலனின்றி மருத்துவனையில் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

### தலா ரூ.2 லட்சம்...

இச்சம்பவத்தில் உயிரிழந்த உதயகுமார், சிசுபாலன் ஆகிய இருவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். என தெரிவித்துள்ளார்.

## வங்கக்கடலில் உருவானது புயல் சின்னம்:

# தமிழகத்தில் நாளை முதல் கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, நவ. 24-

வங்கக்கடலில் புதிய புயல் சின்னம் உருவாகியுள்ள நிலையில் தமிழகத்தில் நாளை (நவம்பர் 25) முதல் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை 12 மாவட்டங்களில கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவலில், தெற்கு அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, நேற்று (23-11-2024) காலை 0830 மணி அளவில் பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதி மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி (புயல் சின்னம்) உருவாகியுள்ளது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, வருகின்ற 25 ஆம் தேதி, தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும். இது மேலும் அதற்கடுத்த இரு தினங்களில் வடமேற்கு திசையில் தமிழகம்-இலங்கை கடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதி மற்றும் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதி முதல் குமரிக்கடல் பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்று (24.11.2024) கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை (25-11-2024): மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கடலூர், அரியலூர், சிவகங்கை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

26-11-2024: கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

27-11-2024: விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

28-11-2024: காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சென்னை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

29-11-2024: திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யவாய்ப்புள்ளது.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். நகரின் ஒருசில பகுதிகளில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31-32 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23-24 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேகாலயா சட்டசபை இடைத்தேர்தல்:

# காம்பேக்ரே தொகுதியில் முதல்வரின் மனைவி மெஹ்தாப் பூண்டி வெற்றி

அகர்தலா,நவ. 24-

மேகாலயா மாநிலம் காம்பேக்ரே சட்டசபை தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் போட்டியிட்ட மாநில முதல்வரின் மனைவி மெஹ்தாப் பூண்டி சங்மா வெற்றி பெற்றார்.

மராட்டியம் மற்றும் ஜார்கண்ட் மாநில சட்டசபை தேர்தலுடன் 13 மாநிலங்களுக்கு உட்பட்ட 46 சட்டசபை தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடந்தது. இதில், மேகாலயா மாநிலம் காம்பேக்ரே சட்டசபை தொகுதிக்கு கடந்த 13-ம் தேதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது.

மேகாலயாவில் பா.ஜ.க. ஆதரவுடன் தேசிய மக்கள் கட்சி ஆட்சி செய்து வருகிறது. இந்த இடைத்தேர்தலில் தேசிய மக்கள் கட்சி வேட்பாளராக முதல்வர் கான்ராட் சங்மாலின் மனைவி மெஹ்தாப் பூண்டி சங்மா போட்டியிட்டார்.

இந்த நிலையில், இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன.

இதில், மெஹ்தாப் சண்டி சங்மா, 4,500 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் மொத்தம் 12,679 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் சதிராணி எம் சங்மா 8,084 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார்.

காங்கிரசின் ஜிங்ஜாங் மரக் 7,695 வாக்குகளைப் பெற்றார். மனைவியின் வெற்றி குறித்து முதல்வர் சங்மா கூறுகையில்,

காம்பேக்ரே மக்கள் வளர்ச்சிக்காக வாக்களித்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அதற்காக நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இந்தச் சந்தர்ப்பத்தில் காம்பேக்ரே மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். வாக்காளர்கள் புத்திசாலிகள், அவர்களுக்கு எது நல்லது, எப்படி வாக்களிக்க வேண்டும் என்பது தெரியும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.